Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முத்திநெறி இலக்கணம்

ACC. NO
46358

"தமிழ் வேத நாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை

Koviloor Digital Library

KOVILOOR AN... LIBRARY, KO... OOR
A. No. 46358

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முத்திநெறி இலக்கணம்

இந்நூலாசிரியர்

"தமிழ் வேத நாவலர்"

முத்தமிழ் வேதத் திருச்சபை

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை.

இஃது

கனடா டாக்டர் **சித. ஏகப்பன் செட்டியார்** அவர்கள்
ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

தேவகோட்டை
ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு
முத்தமிழ் வேதத் திருச்சபை
முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி
வ.பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நூல் பெயர் : முத்திநெறி இலக்கணம்
முதற்பதிப்பு : சுபானு ஆண்டு (2003) ஆவணி மாதம்
நூலாசிரியர் : சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை
உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
பக்கங்கள் : 56 (ருமசா) பக்கங்கள்
வெளியீடு : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
தாள் : 16 கிலோ மாப்லித்தோ
நூலின் அளவு : கிரவுன் 1/8 சைஸ்
விலை : ரூ. 21 (உமக)
எழுத்து : 11 புள்ளி
உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை
பைண்டிங் : வெல் பவுண்டு பைண்டிங்
கிடைக்குமிடம் : **Dr. SV. முருகேஷ்** R.I.M.P. A.M.I.H.
முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்
சித்த மருத்துவம்
கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை

நலந்தா புத்தகக் கடை
வடக்கு வல்லம்பர் தெரு. காரைக்குடி - 630 001.
போன் : 95+4565+234807

இராம. ஆதிரெத்தினம்
இணைச்செயலாளர். முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு. தேவகோட்டை.
போன் : 95+4561+270113

கணினி & அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
தேவகோட்டை - 630 302.
போன் : 95+4561+273347
email : swamirajbal@hotmail.com

Koviloor Digital Library

5/1

இந்நூலாசிரியர்

"தமிழ் வேத நாவலர்" "வைத்தியமணி"

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை.

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

முன்னுரை

எம் ஞானத் தெளிவு குருவின் திருவடி உச்சிமேற் கொண்டு முத்திநெறி இலக்கணம் நூலிற்கு முன்னுரை எழுதுவோமாக.

திருநான்மறைமொழியும் மூவர் தமிழில் ஏழாம் திருமுறை நமக்கு தந்தருளிய நம்பியாரூரராகிய சுந்தரர் திருவாரூர்த் திருக்கோயிலுக்குள் எழுந்தருளும் போது தேவாசிரயன் என்னும் மண்டபத்தில் உள்ள சிவத் தொண்டர்களைக் கண்டு இவர்களுக்கு அடிமை செய்யும்படி திருவருள் எப்போது வாய்க்கும் என்று எண்ணுகையில் சிவபெருமான் முதலடி எடுத்துக் கொடுக்கப் பாடிய திருப்பதிகம் பண் : கொல்லிக்-கௌவாணத்தில் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் திருநீலகண்டத்துக்குயவனூர்க்கடியேன்.... என ஆரம்பித்து அன்னவனும் ஆரூரன் அடிமைகேட்டுவப்பார் ஆரூரில் அம்மானுக் கன்பரராவரே என நிறைவு செய்கிறார். அதன்பின் அனபாய சோழ மகாராஜன் வேண்டுகோளிற்கிணங்கி சேக்கிழார் சுவாமிகள் உலகமக்கள் அனைவரும் சிவனடியார்களின் செயற்கருஞ் செயல்களை தெரிந்து கொண்டு அதன் மூலம் வாழ்நாளை வளமிக்கதாய் ஆக்கி முத்திநிலை யெய்த வேண்டும் என்ற நோக்கில் சிதம்பரம் நடேசமூர்த்தியை தரிசித்து வேண்ட இறைவனும் சேக்கிழார் சுவாமிகளின் உள்ளக் கிடக்கைக்கு ஏதுவாக "உலகெலாமென" அடியெடுத்துக் கொடுத்து பெரிய புராணம் செய்ய அசரீரி வாக்கு திருச்சிலம்பொலியுடன் உண்டாக அவ்வொலி அடியார்களின் செவிகளிலும் புகுந்தது. சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணத்தை (திருத்தொண்டர் புராணத்தை) எழுதி நிறைவு செய்தார். அதன்பின் உமாபதி சிவாசாரியர் திருத்தொண்டர் புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராணசாரம் எனப் பெயர் தந்து

Koviloor Digital Library

எழுபத்தைந்து திருவிருத்தத்தால் அருளிச் செய்து சேக்கிழார் புராணமும் பாடியருளினர்.

அதன்பின் உலக மக்கள் செய்த புண்ணியமும், சிவத்தொண்டும் நாளும் நாளும் வளர்ந்து வர கலியின் கொடுமை தீரவும், சாத்தாயி அம்மாள் வேலாயுதம் பிள்ளையின் மகனாக ஷண்முகநாதபிள்ளை அவர்கள் தேவகோட்டையில் பிறந்து சிறுவயது முதல் இயமநியமம் கைவரப்பெற்று அட்டமாசித்திகள் கைவரப்பெற்று தவக்கோலத்தில் திருக்கழுக்குன்றில் "திருமுறைப்பெருநூல்" திருஞானசம்பந்தர் அசரீரி ஆசியுடன் வேதகிரீஸ்வரரிடம் அரங்கேற்றினர்கள். இந்நிகழ்ச்சியை முத்தமிழ் வேதத் திருச்சபையோர் அறிவார்கள். மேலும் முத்தாத்தாள் நடுநிலைப்பள்ளியில் முத்தமிழ்வேதத் திருச்சபையை தோற்றுவித்து அதன்மூலம் வேத விளக்கம் இயம்பி வந்தார்கள்.

எம் ஞானத்தெளிவு குரு சித.வே. ஷண்முகநாதபிள்ளை அவர்கள் மிகுந்த கனிவுடன் நம் பரம்பரை ஞானிகளின் பரம்பரை. அப்பரம்பரை காலத்தால் குன்றிவிடாமல் இருக்க எண்ணி, எல்லோரும் பிறந்து இறந்து பிறந்து உழலாமல் முத்திநிலை எய்த வேண்டும். என எண்ணி திருவுளம் மகிழ்ந்து சுந்தரர் பாடிய திருத்தொண்டர் தொகையில் சிவரகசியம் உள்ளது என உணர்ந்து அதை "முத்திநெறி இலக்கணம்" எனப்பெயரிட்டு நமக்கு தந்தருளியிருக்கிறர்கள்.

இந்நூலின் சிறப்பு நம் ஆன்மாவின் இயல்பும், எழுவகைப் பிறப்பையும் எழுதி ஆரம்பிக்கிறர்கள். மேலும் 63 சிவனடியார்களும் முத்திநிலை அடைந்த விபரம் எவ்வாறு என அகத்தை ஆழ்ந்து அகழ்ந்து ஆய்ந்து நமக்கு தந்திருக்கிறர்கள். ஏனெனில் நாமும் இந்நூலை வாசித்து வாசித்து அதன்மூலம் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு வீடுபேறு அடையத்தான். ஆகவே இந்நூலை

Koviloor Digital Library

உ

சிவமயம்

வாசிக்க வாசிக்கத் தான் அகக் கருவிகள், புறக் கருவிகள் எது எது எனப்புரியும். ஒவ்வொரு சிவனடியார்களும் எம்பெருமான்மீது கொண்ட அன்பின் முதிர்ச்சியால் நிகழ்ந்த நிகழ்வுகள். பின்வருமாறு அட்டவணைப் படுத்துகிறோம். காண்க.

புறஞ்செல்லுங் கருவியாகிய தத்துவம் சயஅ (48)

க. இராகம் : அ	(உ) ஐம்புலன் : ரு	(ங) ஐம்பொறி : ரு
காமம்	ரூபம்	மெய்
குரோதம்	கந்தம்	மூக்கு
லோபம்	பரிசம்	வாய்
மோகம்	இரசம்	கண்
மதம்	சத்தம் (5)	செவி (5)
மார்ச்சரியம்		
இடும்பை		
வெட்கம் (8)		

ச. கன்மேந்திரியம் : ரு	(ரு) ஞானேந்திரியம் : ரு
வாக்கு	வாய்-பாடவும்
பாதம்	பாதம்-நடக்கவும்
பாணி	பாணி-உழவாரப்படை
பாயுரு	பாயுரு-உந்தவும்
உவத்தம் (க) (1)	உவத்தம்-நீங்கிதவறுதிருக்கவும் (க) (1)

சா. கரணங்கள் : ச	(எ) அவத்தை : ரு	(அ) குணம் : ங
மனம்	சாக்கிரம்	ராசதம்
புத்தி	சொப்பனம்	தாமதம்
அகங்காரம்	சுழுத்தி	சாத்துவிகம் (3)
சித்தம் (4)	துரியம்	
	துரியாதீதம் (5)	

கூ. வினை : உ	(ய) ஏடணை : ங	(யக) மலம் : ங
நல்வினை	புத்திரஏடணை	ஆணவம்
தீவினை (2)	தன ஏடணை	மாயை
	தார ஏடணை (3)	காமியம் (3)

யஉ. திறம்

அறிவு - க (1)

ஆக 41 சிவனடியார்கள் தத்துவம் 48ஐ அரனன்பால் வென்றவர்கள்.

Koviloor Digital Library

யஙஅட்டாங்கம்

இயமம் : ய	நியமம் : ய
வாய்மை	தவம்
செம்மை	செபம்
சேய்மை	சந்தோழம்
மேன்மை	ஆத்திகம்
நன்மை	தானம்
பொறுமை	சிவபூஜை
நேர்மை	சித்தாந்தகேள்வி
வேண்மை	மகம்
சீர்மை	சிவவிரதம்

இயமம் பத்தும், இயமத்தால் ஏற்படும் நியமம் ஒன்றும் ஆக பதினொன்று : 11
மேலே உள்ள 41+11=52
சுக+யக=ருயஉ

தூய்மை (எ)	சிவமதி (ச)
முத்தி	சரியை
ஆதனம்	கிரியை
பிராணாயம்	யோகம்
பிரத்தியாகாரம்	ஞானம் (4)
தியானம்	
தாரணை	
சமாதி (7)	

மேலும் 52+7+4=63
ருயஉ+எ+ச=சாயங

அகக்கருவிகள் 48 (சுஅ)

உயிர், ஐம்பூதம், தசநாடி, தசவாயு, ஆசயம்ரு, ஐங்கோசம், முத்தோடம், மும்மண்டலம், ஆறுஆதாரம்ஆக 48 ஆகும்.

இதன் அடிப்படையில் ஆராய்ந்தால் எத்தனை சிவனடியார்கள் பிறந்தாலும் முத்தி எய்த வேண்டுமென்றால் இந்த அறுபத்தி மூன்றில் ஒன்றாகத் தான் இருக்க முடியும் என்பதை உணரமுடியும். பெரிய புராணத்தை வாசித்து வாசித்து சந்தேகம் உள்ள சிவத்தொண்டர்களுக்கு இந்நூல் தெளிவாக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

முத்திநெறி இலக்கணம் வெளிவர பொருளுதவிய உயர்திரு சிதம்பரம் செட்டியார் அவர்கள் மகன் திரு. ஏகப்பன் டாக்டர் அவர்கள் மிகச் சிறந்த சிவபக்தர்.

Koviloor Digital Library

எம் ஞானத் தெளிவு குருவின் பரிபூரண ஆசியைப் பெற்றவர்கள். அவர்கள் இவ்வுலகத்திற்கு ஆற்றும் தொண்டு கணக்கிலடங்கா. ஏனெனில் என்றென்றும் மக்களுக்கு முத்தியடைய எழுதிய நூலை மக்களுக்கு கிடைக்க இறைவன் உயர்திரு. ஏகப்பன் அவர்களுக்கு வழங்கியுள்ள வாய்ப்பை முழுதும் பயன்படுத்திக் கொண்டார். ஆகவே அதன்பலனை யார்தான் கணிக்க வல்லார்கள். அவர்கள் பரம்பரையே நீடூழி வாழ என்றும் வாழ்த்தும் முத்தமிழ் வேதத் திருச்சபையோர்கள் நன்றிகலந்த அன்பு வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூலை எங்கள் விருப்பப்படி என்றும் நிலைத்து இருக்கும் தமிழ் எழுத்துக்களால் ஆக்கி நல்முறையில் அச்சிட்டுத் தந்த உயர்திரு. ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் புஷ்ப. சுவாமிநாதன் குடும்பத்தாருக்கும் எங்களது மனமார்ந்த அன்பு கனிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எம் ஞானத் தெளிவு குரு வாசிக்கலை பயின்று அதன் மூலம் அகத்தை ஆய்ந்து எழுதிய நூல்கள் தாம் இவை. நமக்காக நம் முன்னோர்கள் தந்த அழியாச் செல்வங்கள் என்றும் துணையாக நிற்பவை எது என்றால் அவர்தம் நூல்கள்தான். கலியுகத்தில் எம் ஞானத் தெளிவு குரு எழுதிய நூல்கள் வெளிவந்து மக்கள் அதை வாசிக்க வாசிக்க கலியின் கொடுமை தீர்ந்து இகபர வாழ்வை அடைவது உறுதி. இந்நூலைப் பின்பற்றி வாழ்ந்து நாமும் சிவனடியார்களில் ஒருவனாக ஆகி முத்திநிலை எய்த திருவருள் கூட்டுவித்ததை எண்ணி எண்ணி இன்பம் அடைகின்றோம். இந்நூலிற்கு முன்னுரை ஆடி பதினெட்டாம் பெருக்கில் ஆரம்பித்து ஆடி சுவாதித் திருநாளில் நிறைவேற்றிய இறைவனின் கருணையை எண்ணிஎண்ணி அகமகிழ்ந்து என்றும் முத்தமிழ் வேதத் திருச்சபையின் அடிமையாக வாழ வேண்டுகின்றோம்.

இவண்

அடியார்க்கு அடியேன்

இராம. ஆதிரெத்தினம் (இணைச் செயலாளர்)

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

முத்திநெறி இலக்கணம்

விநாயகர் காப்பு :

கட்டளைக் கலித்துறை

மறையொலியோடு வலமிட மேலோங்கி மத்தகத்தி
வறை கொண் டுதாழ்வோர்க் கிடையூ றகற்றி யருத்துறவு
முறையே கொடுத்தவர்வீடு புகவருள் மூலநிலத்
திறையே நலமுறக் காப்பாக வென்று மினிதுறவே. (க)

எழுதாக் கிளவி என்னும் சுருதிதுலங்க வலமிடமாய்த் திரியும் இடகலை பின்கலை ஊர்த்துவ கதியாய் (மேன் முகமாய்ச் சென்று) கபாலத்தை முட்டித்தாழ்ந்து கீழ் மூலஞ் செல்லும்படி செய்ய வல்லோர்களுக்கு எல்லா இடையூறுகளையும் நீக்கி பெறற்கரிய துறவைக் கொடுத்து அதனால் அவர் வீட்டை யடையும் வண்ணஞ் செய்யும். (மோக்கவின்பத்தை யடையும்படி செய்யும்) மூலத்தலத்திற்கு இறைவனாகிய கணபதியே சிறப்பு மிகவாகத் துணை செய்து காக்க என்றும் நன்மையுண்டாக!

இவ்வியற் கிரியையே இடம் வலமான கரத்தை மேலோச்சி சிரத்திற் குட்டித் தாழல் என்பதை யுணர்க.

Koviloor Digital Library

சிவமயம்

முருகவேள்

ஆறுதலத் தினுந் தன்னுருக் கண்ட வடியவர்க்கு
மாறு படுநிலை போக்கியே வீடுவள முறச்செய்
தேறு நலமீந் தவர்தம் பகையினொ டின்னலெலா
நீறு படச்செய் குருமுரு கன்றா ணிழற் றுணையே. (உ)

ஆறு ஆதார நிலையங்களிலும் ஆறு ஒளியாய் விளங்கும் தன்னுடைய மெய்யொளியைத் தரிசனஞ் செய்யும் யோகிகளுக்கு நரை, திரை, பிணி, மூப்பு, சாவு என்னும் மாறுபாடாம் நிலையாகிய உயிர் நோயையும், பசி, தாகம், சலனம், களைப்பு, உறக்கம் என்னும் உடல் நோயையும் நீக்கிகாயம் திறமுறும்படி செய்து பகையுந் துன்பமுந்தருந் தத்துவக் கூட்டங்களை எல்லாம் பொடிபடச் செய்தருளுங் குருநாதனாகிய குமரக் கடவுளின் ஒளி பொருந்திய பாதங்கள் துணை.

இவ்வியல்புக் கிரியையே ஆறுபடை வீடாகிய ஆறு தலங்களிலும் சென்று ஆறுமுகக் கடவுளைப் பணியலும் மலைமீதேறலும் எனவறிக.

சரசோதி

அலையா துரன்மிக வன்னமமி தமாயாக்கி யுற்றோர்க்
கிலையெனு தீயு மவரகத் தென்று மிருள்கடிந்து
நிலை விளக்காயகத் துட்பொரு டோணச் செய் நீடொளியாம்
கலைவிளக் குஞ்சர சோதி, மெய்ஞ்ஞானக் கருத்தருளே. (௩)

அலைவுற்றழியாமல் வலிமை மிக்க தாயமைய வாசியை அமிதமாக (குறைவற்றதாக) ஆக்கி (அமித-தாரணை செய்து) நெருங்கிய சார்பாகிய தத்துவக் கூட்டந்தன் வயமாக அதைச் செலுத்திய அருளாள-ளர்களுக்கு அவரகத்துள்ளிருளாகிய மாயை என்றும் நிலையாதழிய உயர்நிலையில் சுடர் பரப்பிப் பிரகாசித்து மெய்ப் பொருளையுணர்த்தும் சுடர்க்கொடியாம் கலைகளறுபத்து நான்கையுந் துலங்கச் செய்யும் சரத்தின்

Koviloor Digital Library

(கலையின்) சோதியாம் சரசோதியே மெய்ப்போத வுண்மையை யருளுவாயாக.

இவ்வியற் கிரியையே அண்டினோர்க்கன்ன மளித்து மனைவிளக்க மடையத் தீப பூசனை யாற்றல் என்பதையுணர்க.

சைவநெறி யாலகிலந் தழைக்கத் தமிழ்விளங்க
மெய்ஞானச் சித்த ரருளொளி பெற்றிவ் விரியுலக
முய்வுறத் தீமை யொழியத் தவமோங்க வோங்க செங்கோல்
வையஞ் செழிக்க வான்மாரி பொழிய வளமுறவே (சு)

செவ்விய நியதியாற் பூ மண்டலம் வளம் பெற்றோங்க தமிழ் கலை பிரகாசிக்க உயர்போத மிக்க நாதாக் களருட் பிரகாசம் பெற்று அகிலமெங்கும் சீவகலை விளங்க தீமையெல்லாம் ஒழிய தவ ஒழுக்கம் விருத்தியடைய மன்னவன் செங்கோல் சீர்மிக்கதாக வையகம் வளன் மிக்கதாய்ச் செழிக்க வழுவின்றி மும்மாரி பொழிய எல்லா நலமும் பெருகுக.

பாயிரம்

ஆன்ம வியல்பு மியம நியமாதி யாம் விரியும்
மேன்மையாம் மோக்க மடைதற் குரிய விதிமுறையின்
பான்மையுஞ் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியசீர்
வான்மறை யுட்பொரு ளுண்மையு மிந்நூல் வகுத்திடுமே(ரு)

உயிரின் சரித்திரமும் கட்டளை ஏற்பாடு ஆகியவற்றின் விவரமும் உயர்நிலையாம் மோக்க மெய்தற்குரிய நெறிப் பகுப்பின்றன்மையுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய உயர் பெருமை வாய்ந்த வேதமாகிய திருத்தொண்டத் தொகையுட் பொருள் மெய்மையையும் இந்நூல் வகுத்துரைக்கும்.

Koviloor Digital Library

வகுத்தமுன் ஞேர்கணூல் வாய்மையறியாது வாய்மதமே
மிகுத்தழிவுச் செயல்செய்தழி நாத்திகர் வீறு கெடத்
தொகுத்தனஞ் சைவசமய நெறித்திறந் தோணவிந்நூல்
பகுத்தறி மெய்யன்ப ரோங்க நலமுறப் பாருலகே. (சா)

வகைப்படுத்திச் சொல்லிய முன்னோர்கள் நூலின் உண்மையறியத் திறனின்றித் திறமாக வாய்மதம் பேசி நாசச் செயல் செய்து நாசமடையும் நாத்திகர் பெருமை யழியும் படியுஞ் சைவ சமய நீதியின் மேன்மைத் திறந் தோன்றும் படியும் இந்நூலைத் தொகுத்துரைத்தோம். நன்றுதீது பகுத்தறியும் உண்மையன்பர்கள் மேன்மை மிக்க நலனடைய உலகில்.

ஆன்ம வியல்பு

உலகி லுயிரணு வோங்குநாதத் தொடுறவு கொண்டு
பலமா கவான்மகன் விந்தொ டுறவாய்ப் பதிந்தவனின்
நிலைமை வளமுறச் செய்யல் பிறப்பொன்று நேரெதிராஞ்
சிலைநுத லாளுட ஞன்மாதி தத்துவஞ் சேரலற்றே. (எ)

பூ மண்டலத்தில் சீவ அணு மேலாகிய நாதத்தோடுறவாய் வலிவடைய புருடனின் சுக்கிலத்தைச் சேர்ந்து அமைந்து புருடனின் நிலைமை விருத்தியாகும்படி செய்யல் முதற்பிறப்பாம் எதிர்ப்படும் பெண்டிரிடம் ஆன்மா தத்துவச் சேர்கையிற் பிரிவெய்தி.

அற்ருங்கு தத்துவஞ்சேரப் பெண்ணுகும லதுயிராங்
குற்றிட வாணுப் பிறக்கும் பிரிந்தது தொன்றுபடப்
பற்றுதலா மோக முண்டாக்கிச் சேர்ந்தப் பதிபிரிந்து
சிற்றுருவாய்க் கருப்பையுறல் ரெண்டாஞ் செனனமதே.(அ)

பெண்டிரிடம் தத்துவக் கூட்டம் அமையிற் பெண்ணுகவும் அல்லது ஆன்மா அமையில் ஆணுகவும் பிறக்கும். இப்படி இருவரிடமும் ஆன்மதத்துவம் பிரிந்தது ஒன்று கூடற்கு மோகத்தை யுண்டாக்கிச் சேரும்படி செய்து அதனுற் சுக்கிலா சயத்தினின்று நீங்கிச் சிறிய

Koviloor Digital Library

வுருவங் கொண்டு கருப்பாசயஞ் சாரல் இரண்டாம் பிறவியாம்.

சென்னமோர் மூன்றுங் குழவியுருவாய்த் திறம்பெறுத
நனவிலாப் பாலகனுலாம் பிறவி நனவறித் தெவ்
வனமாம் பருவமதைந் தாம்பிறவிவனப் பழிந்து
கனங்கெட்டு மூப்புறலாறும் பிறவி கதியுடனே. (கூ)

மூன்றும் பிறவி குழந்தையுருவம் நிறைந்து நிலையாகப் பிறத்தல் நனவாதியாகிய கரணங்கள் தோன்றுது பிதா மாதாக்கள் பாலித்து வளர்ச்சி யடையச் செய்யும் பாலகனுகிய பருவம் நான்காம் பிறவியாம். மனம் முதலாகிய அந்தக் கரணங்கள் தோன்றி யௌவனமடையும் பருவம் ஐந்தாம் பிறவியாம். யௌவன எழில்மங்கிப் பிறர் பழிக்கும் நிலையாகிய விருத்தப் பருவமடைதல் ஆறும் பிறவியாம். பின்னர் மேற்கதி கிடைத்து (மேற்சுவாசம்வந்து).

உடலுறுந் தத்துவச் சூக்கும தேகத்துயிருறவாய்ச்
சடம்விட் டுத்தேவ சொருப முறவேழ தாம்பிறப்பித்
திடமுறுஞ் சென்மங் களாறினும் பற்பல தீக்குணமே
விடப்பற் பலவகை யான பிறவியு மெய்திடுமே. (ய)

சரீரத்திற் பொருந்திய தத்துவங்களோடு கூடிய சூக்கும சரீரத்தில் உயிர்நிலை கொண்டு தூலமாகிய இச்-சரீரத்தினீங்கித் தேவவுரு வடைதல் ஏழாவது பிறப்பாம். இந்-நிலைமையுள்ள ஆறு பிறவிகளிலும் பலவாகிய தீமைக்குணஞ் சாரப் பற்பல விதமாகிய பிறவிகளையும் ஆன்மா அடையும்.

எய்திப் பலவகை இன்னலுழலு மியல்பகற்றித்
தெய்வப் பிறப்பாய்ச் சிறந்த நிலையுறச் செப்புமுயர்
மெய்நெறி யட்டாங்க மாகுமவற்றின் விதியுரைப்போம்
வைதிக மார்க்கம் வழுவா துலகம் வளமுறவே. (யக)

Koviloor Digital Library

அடைந்த அதனூற் பலவகையாகிய துன்பங்களில் அழுந்தி மயங்கும் அத்தன்மையை மாற்றித் தெய்வப்பிறவி யடைந்து நிலையாகிய சிறந்த தன்மையை யடையச் சொல்லியது உண்மை நெறியாம் எட்டுப் பகுதிகளையுடையதாகிய அட்டாங்கமேயாகும் அவற்றி-னுடைய நியதியை முறையே யுரைப்போம். உலகம் நன் நலமுடையதாக வேதநெறி மாறுபாடின்றி யமைய.

இயம நியம விவரம்

வளமுறக் கட்டளை பத்து வகையுமறிந் தொழுக
வுளதான வேற்பாடு பத்துளதாங்கேட் டொழுக்கமெனல்
களங்கா முயிர்க்கொலை சூழு மழிசெயல் காணதனைக்
கொளப் பொய்மை யுண்டாகுங் கேடொழித்துச்
செம்மை கூடிடவே. (யஉ)

நிறைவு சேர (இயமம் என்னும்) கட்டளை பத்தையுங் தெரிந்து அவ்வழி நடக்க அதனூற் பத்தேற்பாடுகள் உண்டாம். (நியமம் பத்துண்டாம்) கேடு என்பது பழிப்புண்டாக்கும். உயிர்வதை முதலிய அழிவுச் செயல் புரியலாம் அஃதுடையோனுகி லதனூற்பொய்மை யுண்டாகும். கேட்டொழுக்கத் தினீங்கிச் செம்மை நெறி சார்க.

கூடுநற் செய்யவ னுன நலமிகுங் கொள்கையது
நீடிட வாய்மை யுண்டாமவன் வாமி நிலையிதனு
வோடித் தினந்தன் னுயிர்க்கலை மாயா துயர் தவரென்
நீடிய தண்டத் தினேராய்த் தவத்தின் நிலையுறுமே. (யங)

அப்படிச் சாரும் தகவாற் செய்யவனுவான் அந்த உயர் நலமுடைய கொள்கை தொடர்பால் வாய்மை உண்டாகும். அவனே வாமி. இந்நிலைமை யுடைய-வனுனல் அதன் பயனுய்த் தன்னுயிர்க்கலையாம் வாசியானது கேடடைதனீங்கி அழிவெய்தல் நீங்கி தவர் என்னும் பெயரையுடைய வுடற்றண்டத்தையடையும் வழியாகிய தவஞ்சித்தியாம் நிலைமை கிட்டும்.

Koviloor Digital Library

உ

சிவமயம்

நிலையாந் தவத்தாற் செபஞ்சித்தி யாகுமந் நேர்மையது
கலைபொய்த்து வீணு யழி வெய்திடாது கருவி நிலைத்
தலத்திற் குருவா முபதச மாய்ச் சஞ் சரித்துவெளி
யுலவிடும் வாசியின் நாதமோங்கச் செய்யுயர் செபமே. (௰௪)

நிலைமையாகிய அத்தவத்தினுற் செபஞ் சித்தியாம் எப்படியென்றுல் தினந்தோறும் தன்னுயிர்க் கலை பொய்த்து வீணுகி யழிவடையாமற் கருவென்னும் மூலத்திற் குருவுபதசமாய் (கிளம்பும் பன்னிரண்டங்குலமாய்) பிறந்து வெளியிற் செல்லும் வாசியின் நாதம் துலங்கச் செய்யலாகிய செபம் சித்தியாம். இதுவே குருவுபதசம் பெற்றுச் செபிக்கும் செபமாம்.

உயர்வாஞ் செபமிது வேபொய்யா வாக்க துடையவனு
கியநல மாங்கள வென்பது காம மிணையனதீக்
கயவொழுக் கங்களது கீழ்மை யாக்குங் களவகற்றுஞ்
செயலினுற் சேயகனு கில்மேலோனுஞ் சிறப்புறுமே. (௰௫)

மேன்மையாகிய செபம் இதுவேயாம். இதையடைந்தவனே பொய்யா வாக்கு சத்திய வாக்கை யுடையவனும் களவென்பது காமம் போன்ற துர்நடத்தையாம். அதனுற் கீழ்மை யுண்டாகும். களவின் நீங்குந் தன்மையாற் சேயகன் குழந்தையுள்ளம் உடையவனுகில் மேலோனுகிய சிறந்த தன்மையை யடையலாம்.

சிறப்புமிக் காமத னுன்மன தின்னிரு ளூர்ந்து தெளி
வுறப்புறு மஃதா நிறைவெனு நன்னல மோங்கிடுந்தீ
மறச்செய லாஞ்சின மென்ப புலைகொடுமைச் செயலஃ
துற வெறுப்புண்டா மிவைநீங் கில்நன்மை
யொடுபொறையே. (௰௬)

சிறந்த அத்தன்மையை யடைந்த நலத்தால் மனதின் அறியாமையா மிருள்நீங்கி மாசற்றுத் தெளிவுண்டாகும். அத்தெளிவினுல் நிறைவு உண்டாகும். சினம் என்பது புலை முதலிய கொடுமைச் செயல்களாம். அதனுல் வெறுப்

Koviloor Digital Library

புண்டாகும். இவைகளில் நீங்க நன்மையும் பொறுமையும் உண்டாம்.

பொறுமை சேர்நல்லவ னுகினுற் றுனம் பொருந்துமது
சிறுமை யறத்தன் னுடற்றத் துவமெனச் செப்புடைமை
நறுவிய தாகக் குருபத மாமூல நாட்டிடுநல்
வெறுழாம் பிரத்தியா காரஞ் சித்திக்கு மிது நலனே. (யஎ)

இப்படியாக நல்லோனும் பொறுமையுடையோனும் ஆகிய தன்மையால் தானம் சித்தியாம். தானம் என்பது கீழ்மைகளெல்லாம் அகல தனது மெய்ப் பொருளாகிய உடற்றத்துவத்தை எல்லாம் குருபதம் என்னும் மூலத்திற் சேர்க்குந் திறனுகிய பிரத்தியாகாரஞ் சித்திக்கும் நலமாம்.

இது நலத் தான்மோன மாம்பன் னிரண்டா யியங்குகலை
யதுமுடி வென்னுந் துவாத சாந்தஞ் சித்தியாமருட்சி
பொதுளு சூதான்மடி யுண்டாகு நீங்கிலப் பொற்பதனுற்
சதுரானநேர்மையும் வேண்மையுண்டாமத் தகவதினே.(யஅ)

அப்படிச் சித்தியாகிய நலத்தால் மோனம் உண்டாகும். மோனம் என்பது பன்னிரண்டங்குலப் பிரமாணமாகித் திரியும் வாசிமுடிவு கிட்டும். அதாவது துவாதச அந்தஞ் சித்தியாம். சூது என்பது வஞ்சம் முதலிய ஏமாற்றுஞ் செயல்களாம் அதனுல் மடியுண்டாம். வறுமையுண்டாம் அதினின்றும் நீங்கினுல் அந்நலத்தால் நேர்மையும் வேண்மை (கொடைத் தன்மையும்) உண்டாம்.

தகவினுற் றன்னகத் திற்றிரி புற்றசித் தாந்தமதின்
மிகவுயர் கேள்வி யுண்டாமது வாசிவீ ழுகிடக்கீழ்
முகமான மூலமே லோங்கிடநாத முறலதனு
லகந்தெளி வாய் நாதனுவா னதனு வருள்நெறியே.(யகூ)

அப்படியுண்டாகிய தன்மையால் தன்னகத்தில் மாறுபாடாம் நிலையடைந்த சித்தாந்தங் கேள்வி-யுண்டாகும். அதாவது வாசி முரிபட்டுப் பாழ் போனதால் கீழ்முகமாகிய மூலாதாரம் மேன்முகமாய் நிமிர

Koviloor Digital Library

நாதமுண்டாம். சித்தம் அந்தத்தை யடையச் செய்யும் சித்தாந்தக் கேள்வியாம் நாதத்தால் மனத்தெளிவுண்டாம். இந்நாதங் கண்டு நாதனுனல் அதனுல் அருள் உண்டாம்.

அருள்நெறி யாய்க்கூட வேமடியா மிருத்தற் றதனு
லருட்குரு நாதனு வானழுக்காறுகள் ளன்னமதம்
பெருகும் பொருளுணலாமதாற் றீச்சொற் பிறக்குமதிற்
பொருந்த வொழியலாற் றூய்மையுஞ் சீர்மை
பொருந்திடுமே.(உ௰)

அருள் உண்டாகிய நலத்தினுல் மடிஎன்னும்மிருத்தகன்று அருட்குரு நாதனுவான். அழுக்காறு என்பதுகள் போன்ற தன்மையுள்ள உன்மத்தப் பொருள்களை உண்ணுவது. அதனுல் தீச் சொல்லுண்டாகும் இவைகளினீங்கினுல் தூய்மையும் சீர்மையும் உண்டாய்ப் பொருந்தும்.

பொருந்து நலத்தா லகத்தழுக் கானபுரைக் குணமெட்
டருகியொழிந்து புனிதவா னுவானது வினிமை
தருநன் மதிசொ லெனுமாயை நீக்கத் தகுசொலுண்டா
மிருபதிக் கட்டளை ஏற்பாடிவை முத்தி ஏணியதே.(உ௰க)

அப்படிப் பொருந்திய நன்மையினுல் தன்னகத் தழுக்காகிய காமக்குரோத முதலாகிய எண்வகை இராகங்களும் அற்று புனிதவானுவான். அதனுல் இனிமையுண்டாம். அதாவது இனிமை தருவதும் மாயையை நீக்கக் கூடியதுமாகிய மதிசொல்லுண்டாதலாம் அமிதச் சொல்லுண்டாதலாம். கட்டளை பத்து ஏற்பாடு பத்து ஆகிய இருபதும் முத்திவீடேறற்குப் படிமரமாம் எனவுணர்க.

Koviloor Digital Library

இயமம் கட்டளைபத்து	(இதன் சுருக்கம்)	நியமம் ஏற்பாடு பத்து
கேடு	செம்மை	தவம்
பொய்	வாய்மை	செபம்
களவு	சேய்மை	தெளிவு
கீழ்மை	மேன்மை	நிறைவு
கோபம்	நன்மை	தானம்
வெறுப்பு	பொறுமை	மோனம்
சூது	நேர்மை	நாதம்
மடி	வேண்மை	அருள்
அழுக்காறு	தூய்மை	புனிதம்
தீச்சொல்	சீர்மை	இனிமை
இவைகளின் நீங்க	உண்டாம் அதனுல்	ஏற்படும்

இவற்றுட் கேட்டினுற் பொய்யும். களவினுற் கீழ்மையும் கோபத்தால் வெறுப்பும் சூதினுல் மடிமையும் அழுக்காறினுற்றீச் சொல்லும் உண்டாதலால் கேடு. களவு. கோபம். சூது. அழுக்காறுஆகிய இவ்வைந்தையும் ஐம்பெரும் பாதகம் (பஞ்சமா பாதகம்) எனச் சொல்லுவர்.

ஏணியி தன்றி யுயர்நிலை யாமுத்தி யெய்த வொணு
காணிவ் வியம நியம நெறியது கைவரலாற்
ரேணிடு மட்டாங்க யோகவியல்பதின் சூக்குமங்கள்
நீணிலை யாகப்புரிநலஞ் சித்திக்க நேர்மையிதே. (உயஉ)

உயர்நிலையாகிய முத்தி வீடடைவதற்குதவும் படிமரம் இதுவேயாம் இதைவிட்டால் அந்நிலையடைய முடியாது இங்குரைத்த இயம நியமம் முறையே சித்தித்தால் அதன் பயனுய் அட்டாங்கயோக வியல்புச் சூக்குமம் புலனும் அழிவில்லாத நலஞ்சித்திக்க இதுவே நேர்மையான வழியாம்.

Koviloor Digital Library

நேரான வாதனம் யோகமுந் தாரணை நீள்பிரத்யா
காரந் தியானஞ் சமாதி நிலையிவை கைவரலாற்
பூரண மோனியாய்த் தத்துவமெல்லாம் பொடிபடுத்தி
யாரண வத்துவே தானாய்ச் சொரூப சித்தாகுவரே. (உ௰௩)

முன்கூறியபடி இயமநியமாதிகள் சித்தியுற்ற நேர்மையால் ஆதனம் இயோகம் தாரணை பிரத்தியாகாரம் தியானம் சமாதியாகியவைகள்கை கூட அதனால் பூரண மௌனி யாகித் தத்துவக் கூட்டங்களை எல்லாம் நீறுபடுத்தி வேதப்பொருளே தானாய் சொரூப சித்திபெற்றுச் சொரூப சித்தாவர்.

ஆகுமச் சித்திச் சரீரமான் மாவி லடங்கியதா
யாகுதல் சுந்தர மூர்த்தி சரிதையிலவ் வியல் காண்
வாகுடனிங் வகைச் சித்தியெல் லோர்கட்கும் வாய்ப் பதின்றிப்
போகுதலாயினு மாத்தும சித்தி பொருந்திடுமே. (உ௰௪)

அப்படியாகுஞ் சித்தியானது இந்தச் சரீரமானது ஆன்மாவில் அடங்கி அதுவே யாகுதலாம் அவ்வியல்பு முறையைச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய சரிதையா-லறியவும். உயர்வு மிக்கதாகிய இச்சொரூப சித்தி எல்லோருக்கும் வாய்ப்பதரிதாயினும் ஆத்துமசித்தி எல்லோரும் அடையலாம்.

பொருந்தியதத்துவமெல்லா முந்தானாய்ப்பொருந்தியவ் வொன்
றிருக்கவஃ தில்லை யது விருக்கத் தத்வ மில்லையதா
யிருத்தற் குரித்தா மொடுக்கப் பருவமுண் டெய்திடுங்கால்
திருந்தா வழிமறிப் பெய்துவர் தீயசெயலவரே. (உ௰௫)

கூடிநிற்கும் தத்துவங்கள் எல்லாமுந்தானாய் இயமானன் ஆகியஒன்று நிற்குங்கால் அவ்வொன்று மில்லையாம். இயமானனாகிய அவ்வொன்று துலங்குங்கால் பலவாகிய தத்துவக் கூட்ட மெதுவுமில்லையாம். தத்துவக் கூட்டமாய் விரிந்து தன்னிலை திரிபுற்ற இயமானன் தத்துவக் கூட்டங்களையொடுக்கிச் சுயம்புவாம் பருவம் ஒன்று

Koviloor Digital Library

எல்லோருக்கும் உண்டு அக்கால் சுவாசம் கீழ்க்கதி கெட்டு மேற்சுவாசமாகும் விழியுண்ணோக்காகும் நாவு உள் மடங்கி மேல்வாசலைச் சாரும். துவதசமாய் பன்னிரண்டாய் நின்ற வாசியானது உச்சிமேற் சென்று முடிவடையும் அந்தத்தையடையும். இவ்வாறு துவாதசாந்தம் இயற்கையாக அடையும் காலத்தை உலகோர் அந்திய காலமென்பர். சித்தாய்ப் போனதாயும்சொல்வர். மகத்தாய் விட்டதாயும் சொல்வர் இந்நிலையை எல்லோருக்கும் அளிப்பதாலேயே அந்தகனுக்கு அறக்கடவுள் என்றும் சமன் என்றும். செங்கோற் கடவுள் என்றும் நடுவன் என்றும் பெயரேற் பட்டிருக்கின்றன. ஒடுங்கு நிலை கிட்டுங் காலத்தில் இயமநியம வழியொழுகாத தீங்கினால் அவ்வழி புக முடியாமல் மறிப்பேற்பட்டு உயர்கதி கொள்ள முடியாமல் கீழ்க்கதி அதோகதியடைந்து மீண்டும் உயர்நிலையடையற்காய் மேற்கதியடையற்காய் நமனுக்காளாக வேண்டிப் பிறவியெடுக்கும் இதுவே பிறவியெடுத்தற்காம் காரணம். இவ்வகைச் சாவைச் சாகு முன்னதாகவே யடைந்து பிறந்தவரே மாற்றிப் பிறந்தவராம். இவற்றின் திறத்தைச் செப்பும் நூலே சாத்திரமாம். சாகுமுன் சாவுற்றுச் சாதுவாய் கீழ் நிலையம் ஆறினும் பிறக்குந் தகவினாலேயே சாத்திறம் ஆருகின. இவ்வியல்பைச் சொல்லபுகின் முடிவில்லாததாகும். ஆனதாலேயே போதிநாதனும் இயம நியமாதியாகிய அறநெறியை மட்டும் கூறியுள்ளார். இயம நியமாதி யொழுக்க மில்லையேல் மேற்கூறியவாறு ஒடுக்கப் பருவங் கிட்டுங்கால் வழிமறிப்பேற்பட்டு மறிப்பார்கள் தீய-செயலவர்கள்.

செயலற் றவமிருத் தாற்சிலர் பேயாய்த் திரிந்திடுவ
ருயர்வா மியம நியமந் தவரு தொழுகியவந்
நயத்தா லொடுக்கப் பருவத் துயர்கதி நாடிவர
வுயர்நிலை யிற்றேவ ராகத் திகழ்வ ருலகவரே. (உ௰௯)

Koviloor Digital Library

தீயசெயலோர்கள் செயலழிந்து அவமிருத்தால் மாண்டு காலகதி கிடைக்காமற் பேயாய்த் திரிவார்கள். மேன்மை மிக்கதாகிய இயம நியமங்கள் மாறுபடா வியல்புள்ளோர்கள் அந்நலத்தால் ஒடுக்கப் பருவத்-துயர்கதி நாடியடைந்து மனிதரே அண்டத்திற்றேவராய் என்றும் விளங்குவார்.

உலகோர் கள்தத் துவமேதேனு மொன்றை யொடுக்கிடினும்
நிலவுவர் மேனிலை என்பதறியவும் நேர்மையொடு
பலமா நியமாதி யட்டாங்த் தோடு நாற்பாதமது
மலதந் நிலையில தென்பது மிந்நூலறைந்திடுமே. (உயஎ)

மனிதர்கள் அரனன்பால் தத்துவக் கூட்டங்களில் ஏதாவதொரு தத்துவத்தை ஒடுக்கினும் உயர்நிலைக் கதியடைவர் என்பதை உணரவும் ஒழுங்கும் வலிமையும் மிக்க இயமாதி யட்டாங்கத்தோடு சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவைகளின்றி அந்நிலையடைந்-தோரில்லை அடையவழியும் இல்லை என்பதையும் இந்நூல் சொல்லும்.

அறைந்திடும் யோகச் சரியையே காண்புராணா கமங்கள்
முறையே செயுங்கிரி யாதிகள் யோகமுனுற்றவருந்
துறையே யறியாது நாத்திகர் நாத்திகஞ் சொல்லியுயிர்
மறைவா ருலகீ ருயர்நிலை யெய்த வகுத்ததிதே. (உயஅ)

புராணங்களும் ஆகமங்களுஞ் சொல்லியதெல்லாம் இயோகச் சரியையே. ஓமம், தற்பணம், வேள்வி முதலியதாகிய மார்க்கங்கள் எல்லாம் இயோகச் செயற்கிரியையே இவ்வுண்மையையறியாது நாத்திகர்கள் நாத்திகம் பேசி உயிர்விடுவார்கள். உலகத்தோர்களே உயர்நிலையடைய வகுத்தது மேற்-கூறியவைகளே.

Koviloor Digital Library

வகுத்தார்கள் கோடானகோடிநூல் நாதாக்கள் வள்ளுவனுர்
தொகுத்தார் திருக்குறள் மூலர் மூவாயிரஞ் சொல்லியுளார்
தகுசித்தாங் கொங்கணர் மூவாயிர முறை சாற்றினர்காண்
மிகுசித்திலக்கிய ராமாயணநா மிசைத்தனமே. (உயகூ)

நாம் உயர்நிலையடையும் பொருட்டுக் கோடானு கோடி நூல்கள் சித்தர்கள் வகுத்தருளியிருக்கிருர்கள். திருவள்ளுவ நாயனுரும் திருக்குறளாகத் தொகுத்து முப்பானூல் அருளிச் செய்தார். மூலமந்திரம் மூவாயிரம் இருக்கின்றது. சித்தர்கள் மெச்சுந் தகுதியுள்ள சித்துவல்லவராங் கொங்கண நாயனுர் மூவாயிரம் முறையாக அருளியநூல் இருக்கின்றது. உயர்சித்தின் இலக்கியமாயுரைத்த ராமாயண சரியைக்கு நாம் செய்த இராமாயண இலக்கியமிருக்கிறது.

இசைத்தவிந் நூற்களிருக் கவும்நாதாக்க ளென்னு மெட்டுத்
திசையினு மேவவு மன்னேர் மரபிற் செனித்திடுநாம்
வசையுற் றழிய நன்ருமோவெனச் சித்திவாய்த் திடச்செய்
நசையா லிதுநூ லுரைத்தோ மெலோரு நலம்பெறவே. (௩ம)

இவ்வாருக நாம் மேன்மையடையுமாறு சொல்லிய நூற்களெல்லா மிருக்கவும் நமக்கருள் நலந்தர எண்டிசை எங்கணும் சித்தர் குழாங்கள் நிறைந்து இருக்கவும் சித்தர்கள் பரம்பரையிற் பிறந்த நாம் பழிக்காளாய் அழிவெய்தல் முறையாகுமா என்றிரங்கி உயர்சித்தி நிலையை எல்லோரும் அடையச் செய்யும் விருப்பத்தினுல் இந்நூலுரைத்தோம். எல்லோரும் நலம் பெறும் பொருட்டு திருத்தில்லைவனம் என்று நிலைகொள்ளற்கரிய தன்மையைக் குறித்துச் சொல்லும் நிலையாகிய மேன்மூலாதாரமாகியதும் அவ்விடத்தணுகுங்கால் தீயின்வழி நடந்தாலன்ன தன்மையை யளித்தலால் நெருப்பாறென்று சொல்லக் கூடியதுமாகிய தலத்தில் அழியா நலம்பெற்று நிற்றற்காக. அமிததாரணை பொருந்தச் செய்து அதனுல் அம் தன்மை அதாவது நீரின்

Koviloor Digital Library

குளிர்ச்சி பொருந்தினோராகிய அந்தணரென்னும் பூரண மெய்ஞானியின் பாதம் போற்றி நல்லனவாகிய சிறப்புமிகப் பெற்ற அடியார்க்கும் அடியேன் ஆகிய நான். இறையவனே ஒரு விருத்தவுருவங் கொண்டு வந்து வாதித்து வழக்குத் தொடுத்து அடித் தொண்டனு யாட்கொள்ளற்குச் சாட்சியாகச் சபையினிடத்து நீட்டிய ஓலைக்குரிய வரானவர் நிலைப்படுத்தியுரைத்த இலக்கியக் குறிப்பின் கூற்றையுணர்ந்து முத்திநெறி இலக்கணம் நேர்மை மாருது முறையுடன் சொல்லுவேன்.

காமம்

சிவபத்தியினுற் காமத்தி னீங்கிய நலத்தால் வாலிபம் திரும்பப் பெற்று உயர்நிலையாம் மோக்கமடைந்தார் திருநீல கண்ட நாயனுர். (க)

குரோதம்

குரோதம் விளையச் செய்யும் மாற்றங் கூறியஒருவன் சிவனடியானுக விளங்கலால் குரோதங் கொள்ளாது அவன்விரும்பிய வண்ணம் அளித்து, குரோதத்தை வென்ற தன்மையால் சிவகதி பெற்ருர் இயற்பகை நாயனுர் (உ)

லோபம்

வறுமை மேலிட்ட காலத்திலும் சிவனடியார்களையன்பு மாருது பசரித்து சுவை மிக்கதாக அறுசுவையுண்டி யளித்து லோபத்தினீங்கியநலத்தால் வீடெய்தினுர் இளையான் குடிமாற நாயனுர் (௩)

மோகம்

வஞ்சகமாய் கொல்லுதற் கென்றே சிவனடியார் வேடம் புனைந்து வந்து கொன்றவனையும் ஈசனடியாருருவத்தின் மீதுள்ள மோகத்தால் அவனுக் கிடறு விளையாவண்ணம் விட்டுவரும் படியாகத் தம்அடியானிடஞ் சேர்ப்பித்து அரனன்பு மோகத்தினுல் மோக்க வின்ப மெய்தினுர் மெய்பொருணயனுர் (௪)

Koviloor Digital Library

சிவமயம்

மதம்

சிவனடியார்களை வணங்காது செல்லுஞ் சுந்தரரையும் அவர்களுக்கு அருள்புரியும் அரனையும் சிவனடியாரன்பு மதத்தால் திருத்தொண்டர்களுக்கு வன்றொண்டனும் புறம்பு அவனையாண்ட சிவனும் புறம்பு எனப்பகரும் பத்தி மதமுடையவராகிய மேன்மையால் விறன் மீண்ட-நாயனார் மோக்கவின்ப மெய்தினார். (ரு)

மார்ச்சரியம்

ஒரு கோவணத்திற்கு அளவு கடந்த உயர்வு கற்பித்து அதற்கு நிகர் ஏதுவும் இல்லையென்று வாதுபேசிய அரனடியாரிடத்தில் மார்ச்சரியம் கொள்ளாது பொருளும் ஆடைகளும் மனைவி மக்களும் தானும் தராசிலிட்ட கோவணத்தின் நிறையைச் சமம் பண்ணத் துலைத் தட்டிலேறி யதான மார்ச்சரியங் கொள்ளா நலத்தால் வீடுபேறெய்தினார் அமர்நீதி நாயனார். (சா)

இடும்பை

சிவனடியார்க் கிடும்பை விளைவித்த பட்டத்து யானையையும் அதன்பொருட் டெதிர்த்துச் சமர் செய்த வீரர்களையும் கொன்று அடியார்க் கிடும்பைச் செயலுக்-கிடும்பை செய் தழிக்கும் அன்புடையவராகிய நலத்தால் சுவர்க வீடெய்தினார் எறிபத்த நாயனார். (எ)

வெட்கம்

பகைவனிடம் மிகுந்த வீரத்துடன் எதிர்த்துப் போர் செய்து வெற்றியடையுந் தருணத்தில் அவன் நெற்றியிற் றிருநீறு துலங்கக் கண்டு நீறணியும் நேர்மை யுடையவரிடத் திலாயான்போர் செய்தேனென்று வெட்க முடையவராய் அமராற்ற தொழிந்து மோக்க மடைந்தார் ஏனாதி நாயனார் (அ)

இராகம் எட்டையும் அரனன்பால் வென்று உயர் நிலையடைந்தவர்கள் இவர்கள்.

Koviloor Digital Library

ரூபம்

அரனன்பு மிகுதியால் உருவமுணர்ந்து களிக்கச் செய்யும் கட்புலன் மயக்கினீங்கி ஈசனுக்கு ஒரு கண்ணைப் பிடுங்கி யப்பிப் பின்பும் முன்போல் கண்ணப்ப எத்தினிக்கயில் கண்ணப்ப நிற்க என்று ஈசன் தடுத்து அருள உருவின்பத்தை அரனருளாற்றுறந்த நலத்தால் அழியா நலமெய்தினர் கண்ணப்ப நாயனர். (கூ)

கந்தம்

இறைவனுக்கு இனிய கந்த மிடுவதாய தொண்டினையே மேற்கொண்டு அதனல் வறுமை மேலிட்ட காலத்தினும் அத்தொண்டாற்றலை விடாது ஒழுகிய நலத்தால் தனக்கு உயர் செல்வ முண்டாக ஈசனருள் செய்ததை வறுமைத் துன்பத்தாற் களைத்து ஆலயத் திலேயே துயில் கொள்ளுங் கால் ஏற்பட்ட கனவாலுணர்ந்து இல்லம் வந்து பார்த்து மகிழ்ச்சியடைந்து பாச பந்தங்களினீங்கி வாழ்ந்து கந்த வின்பத்தை ஈசனுக்கேயாக்கும் மேன்மை நலத்தால் மோக்க நிலை யெய்தினர் குங்குலியக் கலய நாயனர்.(ய)

பரிசம்

தமது அருமைமிக்க புதல்விக்குப் பரிசம் போட்டு அவ் வெழில் கண்டு களித்துத் திருமண நிகழ்த்த விருக்குங் காலத்தில் அவ்வணங்கினுடைய மலர்மணம் பொருந்திய கூந்தலழகைக் கண்டு வியந்து இப்பெண்ணின் கூந்தல் நமது பஞ்சவடிக்காம் எனலும் அப்படியே யாகட்டும் என உடை வாளாற் கூந்தலை யரிந்து அச்சிவனடியார்க் கீய்ந்து அரனன்பினுற் பரிசவின்பந் துறந்த மேன்மையால் முத்திநெறி யுற்ருர் மானக் கஞ்சாற நாயனர். (யக)

இரசம்

கரியுரி போர்த்த கடவுளர்க்கு இனிதேயுப யோகமாகும் பொருட்டு செந்நெல்லரிசி செங்கீரை மாவடு இவைகளைக் கொடுக்கும் நியமமுடையவராய் எங்கும்

Koviloor Digital Library

வயல்கள் செந்நெல் விளையலாயின வாய்த் தோன்றவும் செந்நெல் தவிரவேறு கிடைக்காமையாகவும் ஆகிய காலத்தில் மிக்க மகிழ்வுடன் அதை ஈசனுக்காகும் படி செய்து உண்பதற்குத் தமக்குக் கார் நெல்லரிசி கிடைக்காமையால் இலைக் கறியையே யுணவாயுண்டு அஃதும் அற்றதாக நீரருந்தியும் தந்தொண்டு வழுவாது நற்சுவையுணர்ச்சியை ஈசனன் பாற்றுறந்த நலத்தால் மோக்க வீடெய்தினர் அரிவாட்டாய நாயனர். (௰௨)

சத்தம்

மிக்க இனிமையுடைய வேய்ங்குழல் நாதம் ஈசனன்பு தூண்ட இசைக்குஞ் செயலுடையராய் ஈசனுருவங் காட்டும் பொன்மலர்க் கொன்றை மரத்தைக் கண்ணுற்றுப் பரவசப்பட்டு சிவனின் ஐந்தெழுத்தையும் குழல் நாதத் தோடிசைத்து ஈசனன் பிற்கே சத்தத்தை யாக்குஞ் செயலுடைய நலத்தால் உயர்பதவியுற்ருர் ஆனய நாயனர் (௰௩)

ஐம்புலன் இன்பத்தையும் ஈசன்வசப்படுத்தியதால் வீட்டு நெறியுற்ரோர் இவ்வை வரும்.

மெய்

பரமேச்சுரனுடைய அன்பினல் தனது உடலின்பத்தைத் துறந்து (சமண அரசன் கொடுங் கோன்மையாற் சந்தனங் கிட்டாது போதலும்) சந்தனம் உறைக்கும் கையையே சந்தனமாக கல்லின் உரைத்து மெய்யின்பத்தை ஈசனன் பால் வெறுத்த நலத்தால் மோக்கநிலை யெய்தினர் மூர்த்தி நாயனர். (௰௪)

மூக்கு

பத்தியன்பு கனியும் உள்ளமுடையவராய் புதிய நறுமணம் பரப்பும் மலர்களையெல்லாம் இறைவர்க்கணிவிக்க ஆக்கும் தித் தொண்டாகிய நாசிக்கினிய இன்பத்தை ஈசனுக்கு ஆக்கும் அருமைத் தொண்டாற்றிய நலத்தால் முத்தி வீடெய்தினர் முருக நாயனர். (௰௫)

Koviloor Digital Library

சிவமயம்

வாய்

உருத்திர மந்திரத்தைத் தணியாத அன்போடு செபித்தலே வாய் பெற்றதாலாயபயன் என்று அவ்வண்ணமே செபித்து நாவும் வாயும் பெற்றதாலாய உயர்நலத்தை ஈசனுக்கே யாக்குந் திறத்தால் மோக்க வீடெய்தினர் உருத்திர பசுபதி நாயனர்.

(௰௬)

கண்

சிவனின் திருவுருவங் கண்டு தெரிசனஞ் செய்தலே கண்பெற் றதாலாயபயன் என்று அவ்வாறு பெறவேண்டி எரிமூழ்கி அந்தணர்களெல்லாம் காண தேவர்கள் விரும்பி யடையும் வீடுபேறு பெற்றுர் நந்தனர். (௰௭)

செவி

உயர்நலமிக்க சிவனடியார்களின் திருவுள்ளக் குறிப்பைக் கேட்டு அதையளித்தலே செவியின் பயனென்று அவர்கள் செவியறி வுறுத்தலையாக்குந் திறனுடையராய் வீட்டுநெறி யெய்தினர் திருக் குறிப்புத் தொண்ட நாயனர். (௰௮)

ஐம்பொறிகளையும் ஈசன் வயப்படுத்தும் செயலால் உயர்நிலை யெய்தினவர்கள் இவ்வைவரும்.

கன்மேந்திரியம் ஐந்து

சிவபூசையின் நிமித்தமாக வாக்கு, பாதம் பாணி பாயுரு, உவத்தம் ஆகிய கன்மேந்திரியம் ஐந்தையும் ஒன்றுபடச் செய்த மேன்மையாகிய நலத்தால் அதாவது ஈசனன் பால் கன்மேந்திரியங்களை ஒன்றின்வசப் படுத்தியதால் மோக்கவின்ப மெய்தினர் சண்டீச நாயனர். (௰௯)

Koviloor Digital Library

ஞானேந்திரியம் ஐந்து

தமிழறிஞராகிய வாகீச மூர்த்தி மதுரம் பொழியும் கவிதையைச் சிறப்புமிக வாய்பாடவும் பாதமானது இறைவனைக் காணும் பொருட்டு வருந்தி நடக்கவும் பாணி இறைவனுக்கு உழவாரப்பணி செய்யவும் பாதம் நடை கொள்ளச் செயலற்றபோது பாயுரு உந்தவும் தெய்வ அரம்பையர்கள் வந்து மயக்கலான போதும் உபத்தம் நிலை தவறுதிருக்கவும் ஆக சந்திர மௌலியாகிய ஈசனின் பத்தி மிகுதியால் ஞானேந்திரியம் ஐந்தையும் அடக்கியதான நலத்தால் நற்போதந்தரும் கயிலை-யென்னும் கபாலவுச்சியை யடைந்து அகனவொளி யென்னும் பொய்கையில் மூழ்கி மீண்டு பூதலத்துள் ஐயாறு என்னும் மூலத் தடாகத்தில் எழுந்து ஏறவென்னும் மேல் முகமாக மூலத்தினீங்கி ஐயாருகிய ஐந்து வழியாகிய தேகமே கைலாயமாகவும் அகிலத்துள் ஆணும் பெண்ணும் ஆகிய வைகளே சிவசத்தியாகவும் உணரும் தகவுள்ள ஞானநலம் பொருந்தினர் வேதங்கள் பூசித்து அடைத்த திருவாயிற்பூட்டு என்று சொல்லும் புருவமையத்த மர்திறக்கும் வண்ணம் பாடும் திறமையுள்ள திருநாவுக்கரசு நாயனர். (உ௰)

கன்மேந்திரியம் ஞானேந்திரியம் ஆகியவற்றை ஈசனன் புவசப்படுத்தி மோக்கமுற்றோர் இவர்கள்.

மனம்

சமணர்களின் பொய்யொழுக்கம் அழிந்து கெடவும் சைவ சமயம் வளர்ந்தோங்கவும் மனதெண்ணம் உடையவரா-யாகிய நலத்தால் (எண்ணற் றெழிலுடை யவராகிய) குலச் சிறை நாயனர் முத்தியடைந்தார். (உ௰க)

புத்தி

உயர்நல மிக்க செயல் அடிகட்கு அன்பு செய்யலே யாகும் எனவுணர்ந்து சிவனடியார்களிடத்து அன்புநெறி வழுவா

Koviloor Digital Library

தொழுகிய செயலாங் கிரியையால் தெளிபுத்தி யுண்டாய் அந்நலத்தால் உண்மையாகிய அடித் தொண்டு (அடி என்பது கால், கால் என்பது வாசி. வாசித் தொழிலே அடித் தொண்டாம்) சித்தியாய் அதாவது சிவயோக சித்தி யுண்டாய் அதனுல் அட்டமா சித்திகளெல்லாம் வாய்க்கப் பெற்று சிவனடிகட் கன்பாற்றுந் தெளிபுத்தி யுடைய நலத்தால் மோக்க வின்ப மெய்தினுர் பெரு மிழலைக் குறும்ப நாயனுர்.

(உயஉ)

அகங்காரம்

சிவனடியார் திருத்தொண்டு புரிந்து இறைவனருளால் அகங்காரம் அதாவது சரீரவியல்புத் திறம் நீங்கப் பெற்று அதனுல் உலகத்தோர்கள் பேயென்று சொல்லும் உருவமுடையவராய் அகனற்றலமென்னும் கயிலா-யத்திற்கு வாசியென்னும்கால் மேல்முகமாக நடை கொள்ளச் சென்று மேலும் உயர்நலம் பெருக வாசிநடையுறச் செய்து கீழ்மூல மென்னுந் திருவாலங்காடு புக்கி அவ்விடத்தில் நிலை கொண்டு உயர்கதி யடைந்தார் காரைக்காலம் மையார்.

(உயஙு)

சித்தம்

தம்மிடத்துள்ள உடைமைகள் யாவும் உறையுளுடன் அரனடியார்கட்கே எனச் செய்யும் சித்தமுடையவராகிய நலத்தால் உயர்மோக்க மெய்தினுர் அப்பூதி நாயனுர்.

கரணங்கள் நான்கையும் ஈசனன்பு வசப்படுத்தியதால் மோக்க வின்பமடைந்தவர்கள் இவர்கள். (உயச)

சாக்கிரம்

தனது குழந்தையை சாக்கிர நிலையிற் கவனிப்பது போன்று கவனிப்பாயரன் பத்தி புரிந்து அந்நலத்தால் முத்தியின்ப மெய்தினுர் திருநீல நக்க நாயனுர். (உயரு)

Koviloor Digital Library

சொப்பனம்

தான் தொட்டால் தீட்டேற்படும் எனத் தொடுதற்கும் வெறுப்புற்று நீக்கிய அக்கீழ் மக்கள் எல்லோரும் சிவ கணங்களாய் விளங்கியதான சொப்பனங் காணலும் விரைந்து அவர்களை நாடிப் போய் பணியும் (சிவனடியார் எனச் சொப்பனத்திற்கண் டோரிடத்தும்) அன்புமிக்க நலத்தால் மோக்க வீடெய்தினர் நமிநந்தி நாயனர். (உ௰௬)

சுழுத்தி

சுழுத்தி நிலையாம் மனந்தோன்ரு நிலைப்பருவமாகிய குழந்தைப் பருவத்திலேயே முன்னையொழுக்க வுணர்வு வரப்பெற்று தமது இன்னல் தீர அம்மேயப்பா வென்று அகில-வுலகங்களுக்கும் தாயாகிய உமாதேவியோடு இறைவனும் வந்து மெய் ஞானஅமிர்தங்கலந்த பால் அளிக்கும் வண்ணம் அன்பு கனிய வாய்மலர்ந் தழுது ஞானு மிதம் கலந்த பாலுண்டு ஞான சம்பந்தராகிக் கொஞ்சிப் பேசும் மழலைப் பருவத்திலேயே ஈசன்சீர் பரவிப் பாடும் வல்லமை யுண்டாகப் பெற்று உயர் மோக்க நெறி யெய்தினர். சுழுத்தி நிலையிலும் அரனன்புணர் வுண்டாகப் பெற்ற நலத்தால் திருஞான சம்பந்த நாயனர். (உ௰௭)

துரியம்

அரனன்பு மிகையால் துருவி வன்ருெண்டர் சுவாமியையே தூதாய்த் திரியும்படி விட்டதாகிய செய்கையை மனம் புண் படக் கேட்டு அவரோடுறவு கொள்ளலை வெறுத்து அந் நலத்தால் மோக்க நிலையெய்தினர். அரனன்புத்துரிய முடைமை யாகிய நலத்தால் ஏயர்கோன் கலிக் காம நாயனர். (உ௰௮)

Koviloor Digital Library

சிவமயம்

துரியாதீதம்

ஈசனுக்கு உறைவிடமாகிய கயிலாயமென்னும் அண்டத்தினின்று மாரு நடையாம் அமிததாரணை கொண்டு பூவுலக மென்னும் பிண்டத்தில் உயர்ந்த திசை யென்னும் குறிப்பால் பொதிகை என வழங்கும் புரியட்டத்தைச் சார்ந்து பாசத்தாற் கலக்கமுறும் பசுவின் துன்பத்தை-யுணர்ந்து அத்துன்பத்தி நீக்கிப் பதியைச் சார. அண்டமென்னும் மேலாகியவுடலினீங்கி இடையின் கீழ் உடலமென்று சொல்லப்பட்ட கீழ்மூலத்தில் அமைந்து மூலனுயெழுந்து சொல்லிறந்த வி டமாகிய மூலத்திற்குரிய அவத்தையாகிய துரியாதீத நிலைமையிலும் ஈசனன்பு உண்டாகச் செய்த நலத்தால் விதியை வென்று வருடம் என்னும் வாசியானது செல்லுங்கால் மூவாயிரமாய் நின்றிலங்கும் கபாலவுச்சியில் நிலைபெற்று (நான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்) என உலகெலாம் நல்லின்ப மெய்தும் பொருட்டு திருமந்திரம் செய்தருளினர் சித்தர்களெல்லாம் துதிக்கும் மகிமை பொருந்திய திருமூல நாயனர். (உ௰௯)

அவத்தை யைந்தினும் அரனன்புண்டாகப் பெற்று முத்தியடைந்தவர்கள் இவர்கள்.

ராசதம்

அரனன்புமிக்க ராசத குணமுடையவராய் அரனருள் பெற்றுச் சமணர்களைத் தண்டித்து உயர்நிலை யெய்தினர் தண்டி நாயனர். (௩௰)

தாமதம்

அரனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்து பொருள்களெல்லாம் குறைந்து வறுமை மேலிடவும் சூதாடிப் பொருளீட்டி அதாற்றிருத் தொண்டு வழுவாது நடத்தி சூதாடுங் கால் மாறுபாடு செய்யுந் தீயோர்களைத் தம் உடை வாளாற் குத்திக் கொல்லும் தன்மை யுடையவராய்

Koviloor Digital Library

அதனுல் மூர்க்கரெனத் திருநாமம் பெற்றவராகிய மூர்க்க நாயனுர் தாமத குணத்தையும் ஈசனன்பிற் சாதித்த தகவால் மோக்கமடைந்தார். (௩௰௧)

சாத்துவிகம்

ஈசன் பத மறவாத உயர் நலத்துடன் இனியதாகிய சாத்துவிக குணம் பெற்று விளங்கும் நலத்தால் மோக்க வீடெய்திஞர் சோமாசி மாற நாயனுர். (௩௰௨)

முக்குணங்களிலும் ஈசனன்பு சாரப் பெற்ற நலத்தால் முத்தியடைந்தவர்கள் இவர்கள்.

தீவினை

அரனுக்கு புதுமலரெடுத்தர்ச் சிப்பது போன்று கற்களால் எறியும் செயலாம் தீச்செயலில் ஈசனிடத்தன்பு மிக அவ்வாறே செய்து அரனன்பு மறவாத மேன்மையால் மோக்க மெய்திஞர் சாக்கிய நாயனுர். (௩௰௩)

நல்வினை

திருவெண்ணீறணிதலும் திருவைந்தெழுத் தோதலும் திருத் தொண்டரடித் தொண்டு புரியலும் ஈசனிடத்து எக்காலும் மாருத மெய்யன்பும் ஆகிய நல்வினைச் செயலிலீசனன்பு மாருதவராகிய நலத்தால் மோக்க வின்ப மெய்திஞர் சிறப்புலி நாயனுர். (௩௰௪)

நல்வினை, தீவினை இரண்டையும் ஈசனன்பிற் சாதித்து முத்தியுற்ருேர் இவர்கள்.

புத்திர ஏடணை

திரியம்பகனுகிய ஈசனன்பு மிகையால் புத்திர ஏடணை யினீங்கிய நலத்தால் முத்தி நெறியெய்திஞர் சிறுத் தொண்ட நாயனுர். (௩௰௫)

Koviloor Digital Library

தன ஏடனை

அரனன்பு மிகையாற்றன வேடனையினீங்கி அரசாட்சி புரியும் உயர்நலத்தால் (உயர் சித்தி வாய்க்கப் பெற்றுக்) கயிலாய பதம் எய்தினர் கழறிற்றறிவார் நாயனர். (௫௰௬)

தார ஏடனை

மனையறம் புரிந்து அடியவர்க்கு இன்பமுற வழிபடுந் தொழில் மிக்கவராய் (தார ஏடனையுட் டோயா) நலத்தால் சிவநெறி யடைந்தார் கணநாத நாயனர். (௫௰௭)

ஏடனை மூன்றையும் அரனன்பாற் றுறந்த நலத்தால் முத்தியடைந்தோர் இவர்கள்.

ஆணவம்

இராச ராசர்களை வென்ற வீரச் செருக்காம் ஆணவத்தை அரனன்பாற் றுறந்து அவ்விறைவனின் பாத-கமலத்தையே முடியாகத் தனக்குப் பூணப் பிரார்த்தித்து அவ்வாறே யருளப் பெற்று இவ்வவனி புரந்து பெருஞ் செல்வம் ஆணவத்தாற் படைத்த வீரச் செருக்கு-டையவரா யிருந்தும் அரனன்பால் ஆணவத்துள் நீங்கிய நலத்தால் மோக்க முற்ருர் கூற்றுவ நாயனர். (௫௰௮)

மாயை

அறுபத்து நான்கு கலைகளாய் விரிந்த செந்தமிழறிவாக் கம் உடையவராயிருந்தும் அம்மயக்கிற் சென்று பொய்-யடிமை யாகாமல் இறைவனே மெய்ப் பொருளெனத் தேர்ந்து அரனன்பரான நலத்தால் மெய் நெறிய-டைந்தோர் பொய்யடிமை யில்லாப் புலவர். (௫௰௯)

காமியம்

பூ மண்டல மெல்லாம் கைப்பற்றித் தனது ஆணை செலச் செய்யும் வல்லமையுடையவராய் வாழுங்கால் அக்காமி யத்தை ஈசனன்பாற் றுறந்த நலத்தால் மேன்மைப் பதவி யெய்தினர் புகழ் சோழ நாயனர். (௬௰)

Koviloor Digital Library

மலம் மூன்றையும் அரனன்பால் வென்ற நலத்தால் வீட்டின்பம் அடைந்தோர் இவர்கள்.

அறிவு

அடியவர்கள் தம்மிடையே காமுகன் வந்தானென்று அருவருத்து விலகக் கண்டு காமுகனுன நிலைமையினும் திருவெண்ணீறணிந்துள்ள சிவவேடமே மேலானதென அறிவுத் திறத்தாலோர்ந்து அவருக்கு இரட்டிப்பு மரியாதை வழங்கும் சிவனன்பறிவுத் திறத்தின் மேன்மையால் மோக்க நலம் பெற்ருர் நரசிங்க முனையரைய நாயனுர். (சுஙக)

அரனன்பறிவுத் திறமாகிய ஒன்றினுல் மோக்கநெறி யடைந்தவர் இவர்.

இங்கு கூறியது உயிரின் உறவாயுள்ள ஐம்பூதமும் உடலமெங்கும் பற்றி நிற்கும் தசநாடி தசவாயு ஐந்து ஆசயம் ஒன்றை யொன்று பற்றிக் கூடித் தொடரும் இயற்கையுள்ள ஐங்கோசம், முத்தோடம் மும்மண்டலம் ஆறு ஆதாரம் ஆகிய இவை நாற்பத்தெட்டுங் கூடிய-வுருவமான சரீரத்தில் (இவையே அகக் கருவிகள்) புறஞ் செல்லுங் கருவியாகிய தத்துவம் நாற்பத்தெட்டின் தொடர்பை அரனன்பினுற் றுறந்து அந்நலத்தாற் றுன்பத்தினீங்கி உயர்நெறி யடைந்தோர்கள் நாற்பத் தொருவர் வரலாற்றுண்மை நெறியே. இதைச் சொல்லியதாய காரணம் என்னவென்ருல் இயாவரேயாயினும் இத்தத்துவங்களை ஈசனன்பால் அகற்றுந் திறமுடையரானுல் அந்நலத்தால் இனிதே முத்தியடையலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாகவேயாம். இது முத்தியடைதற்குரிய அருள் நெறியாகும். இடையூறின்றி நிச்சயமாக முத்தி இன்பமடையும் பொருட்டு முறையாக வகுத்துரைத்தது அட்டாங்கம் ஆம் அதில் முதன்மையாகியதும்

Koviloor Digital Library

அவ்வொன்றில் பத்துப் பகுப்புள்ளதுமாகிய கட்டளைப் (இயமம்) பாங்குணர்ந்து அவ்வாறொழுகி யதனுல் ஏற்பாடு (நியமம்) பத்தும் உடையவராய் அந்நலத்தால் சித்தம் சலனமற்று நிலைநிற்கச் செய்யும் நலந்தரும் ஆதனம் சித்திக்க நிலைகொண்டு இயோகம் முறையாகப் பழகி அந்நலம் முற்றுதலாக வானதன்மையால் அதுவரை கலையைப் பாழ்போக விட்டகுறை தீரத் தாரணை செய்து அது முற்றிய உயர்நலத்தால் பிரத்தியாகாரம் தியானம் இவைகள் சித்தியாக அதனுல் நேர்மையாகிய சமாதி நிலையில் நின்று அதனுல் மோக்கம் சித்தி பெறவமைதல். இது ஒரு பதினெட்டாயின. அமைதற்குரிய சரியை, கிரியை, இயோகம், ஞானம் ஆகிய நான்கையும் முன் கூறிய நாற்பத்தொன்று பதினெட்டுடன் கூட்டச் சரியாக அறுபத்து மூன்ருகும். முத்தியடைதற்குரிய வழி சொல்லிய அறுபத்து மூன்றிற்கு நாம் முன்பு கூறியது நிற்க இருபத்திரண்டுக்கும் இலக்கணம் சொல்லுவோம் கருத்தூன்றிப் பார்க்கவும் தத்துவப் பிணிப்பின் விடுபட்டு குரு அருட்டகவால் அட்டாங்க யோகம் பொருந்தி அந்நலத்தால் சொரூப முத்திப்பேறு வாய்க்கப் பெறும் தன்மை இல்லாதவராக ஆயினும் சீவன் முத்தியடையக் கூடும் எனத் தெளியும் வண்ணம் நாம் சொன்னேம். தத்துவங்கள் ஏதேனும் ஒன்றை அதன்போக்கிற் செல்லவிடாமற் பத்தியால் தடுத்து உயர்நிலை-யடைந்தோர்களுடைய இயல்பினை எல்லாம் மோக்க-வின்பந் தரும் அட்டாங்கம். நான்கு பாதம் ஆகிய இப்பகுப்பு ஒவ்வொன்றிலும் தேர்ந்தவர்கள் சரியையும் உள்ளபடியே சொல்லுவோம்.

Koviloor Digital Library

அட்டாங்கம்

இயமம் (ய) ல் வாய்மை

சமுத்திரத்தில் வலைவீசி அதில் அகப்படும் மீன்களில் ஒன்றை தினமும் அக்கடலிலேயே சுவாமிக் கென்றுவிடும் செயலுள்ளவராய் அச்செயலை வறுமை மேலிட்ட காலத்தும் செய்து பொன்மேனியும் நவமணி பொருந்திய உறுப்புக்களை உடையதாக ஒரு மீன்ஒரு நாள் பட அதையும் அவ்வாறே கடலில் விடச் செய்த வாய்மை தவறாத நலத்தால் மோக்க மெய்தினார் அதிபத்த நாயனார்.
(சுலஉ)

செம்மை

சிவனடியார்க்கு இனிதே தொண்டு செய்யும் செம்மைக்குச் சற்று இடறு செய்த தம் மனைவிக்கு இடறு செய்து செம்மை பேணுந் திறத்தால் மோக்கமுற்றார் கலிக்கம்ப நாயனார். (சுலஙு)

சேய்மை

மெய்யன்பு மிக்கவராய் சிவாலயத்திற் தீபமிடும் மேன்மை மிக்க பணி செய்யற்கு இயலாமையால் மனம் நோந்து (சேயகனாய்) குழந்தை யுள்ளம் போன்று பிடிவாதமாய் ஏற்றிய தீபம் நன்றாய் எரிதற்கு எண்ணெயாகத் தன்கழுத்தை யரிந்து இரத்தத்தை வார்க்க முயன்று முத்தியடைந்தார் கலிய நாயனார். (சுலச)

மேன்மை

ஈசனின் மெய்யன்பர்களைத் தம்முன் இகழ்வோரைத் தண்டாயமென்னுங் கருவி கொண்டு அவர்கள் நாவைப் பற்றி இழுத்து அரிந்து கொன்று கீழ்மை கடிந்து மேன்மை பேணுந்திறத்தால் முத்திநெறியுற்றார் சத்தி நாயனார். (சுலரு)

நன்மை

சைவநெறி தழைத்து வளரவும் உத்தமர்கள் உயர்நல மடையவும் செய்விக்கும் நல்லதாகிய சித்தம்

Koviloor Digital Library

உடையவராய் அரசாட்சி செய்து சிவனின் திருத் தொண்டாற்றும் நன்மையுடைய செயலால் முத்தி-நெறியுற்ருர் ஐயடிகள் காடவர் கோன் நாயனுர்.
(சுகு)

பொறுமை

இறைவன் றிருத் தொண்டாற்றலாலேயே தனது செல்வ மெல்லாங் குறைந்து வறுமை மேலிட்டும் ஈசன் பாலன்பு குன்ருது பொறுமை மிக்கவராய் தீபமிடுந் திருத்தொண்டு வழுவாது செய்து உயர்பத முற்ருர் கணம்புல்ல நாயனுர்.
(சுஎ)

நேர்மை

உயர்வு மிக்க மேன்மையுடையதும் குறைவற்ற தன்மையுடையது மாகிய தமிழில் நிறைந்த புலமை யுடையவராய் கோவை முதலிய பிரபந்தங்கள் இயற்றுவதில் வல்லவராய் அதுவே தொழிலாகக் கொண்டு அத்தொழில் கொள்ளத் தகுதியும் நேர்மையும் உள்ள அரசர்களிடம் சென்று அழியாத புகழுடைய கோவை முதலியவைகளை விரித்துரைத்து அவர்கள் மகிழ்வுடனீயும் பொருளைப் பெற்று அப்பொருள் கொண்டு அரன்றிருப் பணியாற்றும் நேர்மையுடைய தகவால் மோக்க முற்ருர் காரி நாயனுர். (சுஅ)

வேண்மை

இழிவுள்ள சமண சமயக் கட்டுப்பாட்டினின்றும் விடுபட்டுச் சைவசமய நெறியைக் கடைப்பிடித் தொழுகியந் நலமுணர்ந்து மெய்ச் சமயமாகிய அதன்வழி தவருது உலகோர்களெல்லோரும் அதன்வழி யொழுகியுயர் வடையும்படி அரசாட்சி செய்து தாம்யெய்திய நலம் எல்லோரும் அடையுந் தன்மையாக்கும் வேண்மையால் மோக்க மெய்திஞர் நின்ற சீர் நெடுமாற நாயனுர். (சுகூ)

Koviloor Digital Library

சீர்மை

சரீரத்தை இறைவனுக்கு ஆலயமாக்குந் தகவுணர்ந்து அவ்வாறே யாக்கிய சீர்மையால் மோக்க மெய்தினர் வாயிலா நாயனர். (ருய)

தூய்மை

மிகுந்த சரீர வலிமை யுடையவராய் கொடிய பகைவர் களையும் ஆற்றலழியச் செய்யும் திறம்படைத் திருந்தும் யாரிடத்தும் அழுக்காறிலாதவராய் பகைவரிடம் சமர் செய்து தோற்றவர்கள் சார்பாய்ப் போர்த் தொழில் புரிந்து வென்று அதற்குக் கூலியாகப் பொருள் பெற்று மேன்மை மிக அரன்றிருப்பணியாற்றுந் தூய்மை யுடையவராய் மோக்க மெய்தினர் முனையாடுவார் நாயனர். (ருயக)

இயமவழி தவரு தொழுகிய கிரியையுடைய வராய நலத்தால் முத்திநெறி அடைந்தவர்கள் இவர்கள்.

நியமம் (ய)

தவம்

சிவபூசனைக் கிடறு விளையச் செய்த நங்கையின் கரத்தை வாளாற் சேதித்து சிவபூசனையைக் காக்குந் தவமுடைய மேன்மையால் மோக்கமெய்தினர் கழற்சிங்க நாயனர். (க)

செபம்

சிவனடியார்களுக்குற்ற வறுமையை நீக்க எண்ணங் கொண்டு அளவற்றதாகிய தமது பொக்கிஷத்திலுள்ள செல்வப் பெருங்குவையனைத்தையும் சிவனடியார்கள் கொள்ளையிட்டுச் செல்லலாம்இதை பறையறைந்து சொல்லுக எனச் செப்பும் நற்செபமுடைய தகவால் மோக்கமெய்தினர் இடங்கழி நாயனர். (உ)

Koviloor Digital Library

சிவமயம்

சந்தோஷம்

இறைவன் றிருத்தொண்டாற்றும் நெறிமுறைமை மேற் கொண்ட தகவால் அரசனென்றும் கூறிக் கொள்ளாத களிப்புடையவராகிய மேன்மையால் மோக்கமெய்தினர் செருத்துணை நாயனர். (௩)

ஆத்திகம்

சிவனுக்குத் திருதொண்டு செய்தலே சிறந்த ஆத்தி. (ஆஸ்தி) யென்று செய்து ஆத்தியுடையவராய் மேநிலை எய்தினர் புகழ்த்துணை நாயனர். (௪)

தானம்

உறவினர்கள் சிவன்கோவிலுக்குக் கொடுத்ததற்காய் வைத்திருந்த நெற்களை யெல்லாம் உபயோகப் படுத்திக் கொண்டமை யுணர்ந்து சினங் கொண்டு அவர்களை யெல்லாம் அழித்து ஈசனுக்கென வுதவும் மேன்மையால் மோக்க மெய்தினர் கோட்புலி நாயனர். (௫)

சிவபூசை

மெய்யன்பு பொருந்திய உள்ளமுடையவராய் பத்தியுடன் என்றும் ஈசனைப் பணியும் நியமமுள்ள சிவபூசை யுடைய மேன்மையால் முத்தியடைபவர் பத்தராய்ப் பணிவார். (௬)

சித்தாந்தக் கேள்வி

ஈசனையே மிக்க அன்போடு பாடித் துதித்தற்காக சித்தாந்த சிரவணஞ் செய்து முத்தியடைவோர் பரமனையே பாடுவார். (௭)

மகம்

என்றும் சித்தம் சிவனிடத்திலேயே பொருந்தச் செய்து அதனல் திருச்சித்தம் பலமாக அமையுமாறு செய்யும் மகமுடைய மகத்துக்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார். (௮)

Koviloor Digital Library

சிவமயம்

சிவவிரதம்

சிவவிரதச் சிறப்பு நிறைந்த ஊர் என்னும் சிவவிரதத் திருஆர் ஊரிற் (திருவாரூரிற்) பிறந்து சிவவிரதியாக விளங்கும் தவமுடையவரே திருவாரூர்ப் பிறந்தார். (கூ)

சிவமதி

முப்போதும் இறைவன் றிருமேனியைத் தீண்டி-யர்ச்சிக்கும் பத்தி மேன்மையாம் சிவமதியுடைய நலத்தால் முத்தியெய்துவோர் முப்போதுந் திருமேனி தீண்டுவார். (ய)

இயமம் என்னும் கட்டளை பத்துவகையால் பிறக்கும் ஏற்பாடாகிய பத்து வகை நியமக் கிரியையால் முத்தியுற்றோர் இவர்கள்.

இயமம் பத்துவகையால் நியமம் பத்து ஏற்படுகிற படியால் இயம நியமங் கூடிய தொகை பதினென்-றேயாம் ஆக அடியார் தொகை (ருயஉ)

முத்தி வீடு (க)

உயர்வு மிக்க அண்டம் என்னும் மலையிலும் பிண்டம் என்னுங் கானகத்திலும் உள்வீடாகிய மூலத் தலத்திலும் (அங்கி தாரணை என்னும்) தீ வளர்ந்து எங்கெங்கும் நிறையவாகச் செய்து பசுமலம் என்னும் ஆன்மா ஆதியாகிய தத்துவங்களை எல்லாம் நீறு நீருக வெந்து போம்படி யாக்கி வெளிரிய திருமேனி யமையப் பெற்றுக் காணும் முழுநீறு பூசிய முனிவரென்னத் துலங்கும் படி திருநீற்றை அண்ட வெற்பென்னுஞ் சிரத்திற் பிறை-வடிவமாயும் பிண்ட அடவி என்னும் இதயத் தானத்தில் இரவி வடிவமாயும் உள்வீடாம் மூலத்தானத்தில் சுடர்வடிவமாயும் பூசி அதாவது முத்தீ வடிவந் தோணப் பூசியந் நலத்தால் மோக்கவீடு பெறுவோர் முழு நீறு பூசிய முனிவர். (ருயரு)

Koviloor Digital Library

சிவமயம்

ஆதனம்

இப்பாலுள்ள கலை(பின்கலை)யாம் தென்கலை என்னும் செந்தமிழ் வழங்கும் எல்லையாகிய கீழ் மூலத்திற்கு அப்பாலாய்ச் செல்லும் அடி என்று சொல்லப்படும் இடகலை சேரும் மேல் மூலமென்னுந் தலமாகிய வடகலை வழங்கும் எல்லைத் தலமாம் மேல்நிலையைச் சார்ந்து இச்சரீரத்தைச் சிவாதனமாகச் செய்யும் அப்பாலடிச் சாரும் தகவுள்ள முத்தர்களே அப்பாலும் அடிசார்ந்தார். (ருமச)

பிராணாலயம்

பேரின்ப முண்டாகக் குரு உபதசம் (எழும்பும் பன்னிரண்டு அங்குலமாகிய வாசி) சொல்லக் கேட்டு அவ்வா றொழுங்குடன் சாதனை செய்து அந்நலத்தால் ஒன்பது பெருவாசல்களையுடையதாயும் பருத்த உருவமுடையதாயும் தோற்றும் உருவமாய் மெய்யென்ன வளருங்கோபுரத்தை திருகென்னும் மறைமொழியாற் பொய்யென வுணர்ந்து தெளிந்து சங்கையற்று உட்புகுந்து அடிபட வொலிக்கும் மணிமண்டபமென்னுங் கபால வுச்சியைச் சார்ந்து அண்டவெற்பைமுட்டி வளர்ந்து நிற்கும் தண்டமென்னும் கொடிமரத்தைச் சார்ந்து உள்ளொளியாய் விளங்குஞ் சுவாமி (சுய வாமி. தானே யொளிருஞ் சோதி)யைக் கண்டு. இடகலை, பின்கலை என்னுங் கரம் இரண்டையும் சிரத்திற் கேற்றிக் கூடச் செய்து கும்பிடல் என்னும் கும்பியல் ஊன்றச் செய்து ஓங்கார வடிவமாய்ச் செல்லும் சுழினை நாடியிற் கோட்டமின்றிச் செல்வது போல் பிரகாரம் வலம் வந்து அர்த்த மண்டபமென்னும் நடுமூலத்தைக் கடந்து இருள் நிறைந்த கருப்பக் கிரகமென்னும் மூலத் தானத்தில் திரையை நீக்கி இருளறச் செய்து அதாவது மூலக் குண்டலி நிமிரச் செய்து தீப தரிசனஞ் செய்தலென்னும் மூலாக்கினி துலங்கச் செய்து ஆயிரமாய் விளங்குங் கலையாகிய மலரும் அக்கலையொலியாகிய ஆயிரம்

Koviloor Digital Library

நாமமென்னும் அசபையின் நாதமாம் மறையும் அருச்சித்தலென்னும் அமித தாரணை செய்து சரீரமே சிவாலயமாக வேதங்களுந் தேடிக் காணாத மெய்ப் பொருளாம் இறைவனுக்கு ஆக்குவிக்கும் பிராண லயம்புரி மேன்மையுடைய நலத்தால் மோக்க மெய்தினார் பூசலார் நாயனார். (ருயரு)

பிரத்தியாகாரம்

அரனன்பு மிக்கவளாய் ஈசன்றிருவடி மறவாது (சிவகலையாம் வாசித் தொழில் மறவாது) அந்நலத்தால் பதிக்கெய்துந் துன்பமும் (சீவனுக்கேற்படும் தீங்கும்) தங்களுடைய நாட்டிற்கேற்படும் பாதகமும் (சரீரத்திற் கேற்படும் இன்னலும்) நன்குணர்ந்து அதை நீக்கும் பொருட்டு அடிகள் ஆக்கம் பெற்றுயர் வெய்தும் பணிபுரிந்து (வாசிபலம் பெற்றுயரும் சாதனை செய்து) அத்திரு தொண்டின் நலத்தால் திருவெண்ணீற்றொளியும் சைவ நெறியும் வளர்ந்தோங்க (பசுவென்னும் ஆன்மாவின் மாயை என்னும் மலம் நீறுபடவும் உயிரழி வெய்தாத செவ்விய மார்க்கம் விருத்தியடையவும்) தென்னாடெங்கும் தெய்விக மார்க்கம் சிறந்து தேயங்கள் எல்லாம் மேன்மை யடையவும் (தென் கலை என்னும் பின்கலை வழங்கும் கீழ்மூலாதார நிலையங்களெல்லாம் சீவசோதிக் கதிர்பரந்து ஒளிரவும் கீழ்முகமான ஆறுதலங்களும் மேல் முகமாகவும்) கணவன் கூன் நிமிரவும் தீயவர்களை அடக்கி (சீவன் கோட்டந்தீர கருவிகளை யெல்லாம் பிரத்தியாகாரம் செய்து செயித்து) அந்நலத்தால் முத்தி யெய்தினாள் சோழர்குலக் கொடியாகிய மங்கையர்க்கரசியம்மையார்.

இச்செயல் பிரத்தியாகாரக் கிரியையாம் -. (ருயசா)

Koviloor Digital Library

சிவமயம்

தியானம்

அடியாருருவமே திங்கள் சூடிய இறைவன் றிருவுருவா மெனுந் தியான நேசமுடைய நலத்தால் மோக்க மெய்தினர் நேசநாயனர். (ருமஎ)

தாரணை

இறைவனுக்குச் செய்யற்கரிய திருப்பணி செய்யச் சிலம்பியுருவ மமைந்தும் அழியாத திருப்பணி செய்ய உலகாளும் பெருவாழ்வு மிக்க கோச் செங்கட் சோழ மன்னவனுய்ப் பிறந்தும் வரும். இறைவனன்புத் தொடராந் தாரணை யுடைய நலத்தால் மோக்க முற்ருர் கோச்செங்கட் சோழ நாயனர். (ருமஅ)

சமாதி

வேதங்களும் தேடிக்காணுத முழுமுதற் பொருளாம் ஈசன் நடனஞ் செய்யும் சிதம்பரம் என்னும் வெளியுச்சியில் அடர்ந்த தில்லைவன மென்னும் நெருப்பாறில் (நிலை கொள்ளற்கரிய இடத்தில்) சார்ந்து நிலைபெற்று நிற்க போகாப் புனலென்னும் அமிர்ததாரணையால் தில்லைக் காட்டின் வேகாததலை பெற்று விளங்கும் உயர் நலம் சாகாத காலாற் பெற்று கபாலவரையில் நடக்கும் கலைகள் மூவாயிரமும் நீரின் குளிரென்னும் அத்தன்மைக் குணமுடையதாக ஆக்கிய அந்தணராய் (சமாதி) சமமாய் நிறைந்த ஆதிவத்துவைக் கூடியவருடன் மூவாயிரமாய் நிற்கும் செவ்விய தன்மையுடையவராய் திருச் சித்தம் பலமாகப் பெற்றுச் சிறந்து சமாதியை யடைந்த முத்தரேயாம் தில்லை வாழந்தணர். (ருமகூ)

அட்டாங்க இயல்பால் முத்தியடைந்தோரிவர்கள்.

Koviloor Digital Library

சிவமயம்

சரியை

மிக்க உவகையுடன் ஈசனின் மெய்ச் சரியையைக் கற்று இனிய ஏழிசை துலங்கும் யாழிற் பொற்புக் கனியும் வண்ணம் மிகவே இனிதே ஈசனின் சரியையை இசைத்து அந்நலத்தால் உயர்மோக்க மெய்தினர் திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனர். (சுங)

கிரியை

இல்லற விதிப்படி உயிர்நிலைக்கலைத் தொழிற் கிரியைப்படி மறையொலி முழக்காம் தசவித நாதங்களும் முழங்கித் தெளிவுண்டாக்க உயர்ந்த அடுக்கு நிலையாம் (அரசாணியாம்) ஆதாரம் கடந்து திருவிளக்கென்னும் மேன் மண்டல வொளி மிளிரச் செய்து கீழாருதார மூலமாம் ஓமாக் கினியை வளரச் செய்து உயர்வு மிகக் களிப்புடன் வலம்வந்து உள் மனையில் வளரும் கன்னி யென்னும் மூலத்தலத்துறுங் குண்டலி சத்தி மலர்ச்சியடைய (மேன் முகமாக) சந்திரன், சூரியன் அக்கினியினுடைய வுருவம் பொருந்தியதாயும் இடமும் வலமும் ஒன்ருய்ச் சந்தித்து வளையும் உருவம் பொருந்தியதாய் விளங்குவதும் திருத்தாளி யென்று சொல்லப்பட்ட மங்கல நாண் என்னும் வாசி பொருந்தும் படியாய்த் தளையிட்டு மிக்க இருள் சூழ்ந்த நிலைய மென்னும் கருங்கல் லம்மியில் ஒருகால் என்னும் சுழிமுனை நாடிக் கதிர்சார்வுறச் செய்து அண்டத்தில் ஒளிவீசித் துலங்கும் அருந்ததி என்னும் கற்பம் (மலைமீன்) அதாவது அண்டவொளி கண்ணுற்றுயர்வடையக் குண்டலி சத்தியாம்கன்னிகைக்குக் காட்டி நலமுறச் செய்து உறவு முறையென்னுங் தத்துவக் கூட்டங்களெல்லாம் அழியா நலமெய்த எண்டிசை யோரென்னும் அட்டதிக் குள்ளோர்களும் எதிர்பார்த்து அனுசரிக்க மங்கல மிக்க கல்யாணம் என்னும் சிவயோக மேன்மை நலமுடைமையால் அருள் நேயத்துடன் கன்னிகை யென்னுங் குண்டலி சத்தியை

Koviloor Digital Library

உள்வீடென்னும் மூலத்துள் கூடி யொன்று பட்டு மெய்ஞான மென்னும் புத்திரன் உண்டாகப் பேரின்ப நிலயடைதலாம் வீடு பேறெய்துங் கிரியை யாற்றி இசை ஞானியாம் மனைவியைக் கொண்டில்லற மென்னும் சிவயோகக் கிரியை வாழ்க்கை நடத்திய நலத்தால் சுந்தரரைக் குழந்தையாகப் பெற்று உயர் மோக்க மெய்தினர் சடைய நாயனர். (சுஉக)

யோகம்

தனிமுதற் பரம்பொருளாம் பரமான்மாவானது மாயையாம் கண்ணுடியிற் பிரதிபலிக்க வரும் வடிவாம் சரீரமெடுத்து அரனடித் தொண்டென்னும் சுவாச நடைத் தொழில் செய்து விளங்குங் காலத்தில் அரனுக்கினிய மலரென்னும் வாசி குறையாது (நந்தவனமென்னும்) கயிலாய கிரியாகிய அண்டத்திற் சார்ந்து நடைகொள்ளற்கு இடருக அநிந்தை என்னும் இனிய ஓசையும் கமலினி என்னும் பேரெழிலும் உண்டாக்கும் மயக்கிற் சிக்க அதனுல் மனம் மானுடத் தன்மையை யடைந்து அவ்வியல்புடன் குழந்தைப் பருவம் நீங்கி வளர்ந்து யௌவனப் பருவமெய்தி (மக்கட் பிறப்பின் பொது வியல்புடைமை யாயதன்மையே யமைந்து) திருமணஞ் செய்து கொள்ளற்குத் தயாராய் இருக்கும் திருநாவலூரராகிய நம்பியாரூரருக்கு அருள்புரிய உலகத்தவர்கள் மருள் கொண்ட பித்தனென்னும் உருவங் கொண்டு அவ்விடஞ் சென்ற சித்தர் பெருந்தகையானவர் உன்னிடம் நமக்குள்ள வழக்கைத் தீர்த்துக் கல்யாணம் செய் என்று தடுத்து எமது அடித் தொண்டு செய்யும் பரம்பரையைச் சேர்ந்தவன் நீ ஆகையால் அவ்வாறே செய்வாய் எனலும் அவர் அப்படியா என நகைக்கலும் அட உனக்கென்ன சிரிப்பு உனது முன்னோர்கள் எழுதித் தந்த அடிமை முரியோலை என்னிடத்திதோ விருக்கின்றது என அடித் தொண்டென்பது வாசி யோகம். அதைப்பதங் காணும் வண்ணஞ் செய்து பிரமமான புகழ் மிக்கோரே.

Koviloor Digital Library

பிராமணராம் மெய் நலமுடையோர் கலைகள் மூன்றும் வெட்டியாய்ப் பையப் பறந்து பறந்து அழிவுறும் பஞ்சென்னப் பாழ்போக விட்டுப் பஞ்சையாகாமல் சிறப்புள்ள முப்புரி நூலென்ன வலுவாய்ச் செய்து அதன்பலத்தால் சூரியனும் சந்திரனும் சந்திப்பதை யறிந்து அந்தப் பரமண்டலத்திற்கு அந்நூலைப் பற்றி பலமாய் பிடித்து ஏறி மேலேழ் நிலைய வுச்சியை யடைந்து அதல முதலாகச் சொல்லப்பட்ட கீழேழ் நிலையத் தடியாம் கீழ் மூலத்தலத்திற் செல்லும் படியாய் அமிதக்கதித் தாரணையாகிய நீரை இறைத்து அத்தலத்தின்னலடையாது சூரியன் நலமுறச் செய்யும் மேன்மையாற் காயந் திறமடையுஞ் செயலுடையவராய் அதனாற் பார்ப்புத் தன்மையை யுடையவராகி உயர்ந்தோரே நூலோர். விழியானது சுழிமுனையை நோக்கவும் சுவாசம் மேல் நோக்கவும் அதாவது மேற்சுவாசம் ஆகவும் நாவு உள் செல்லவும் அதனால் சுவாசம் வெளியிற் பாயாது உச்சித் தமர்வழி யோடவும் ஓட்டி சாகாமல் இவ்வுடலம் என்றென்றும் நிலைபெற்றிருக்க மேன்மையாம் சாவெய்திச் சாதுவாய் சாகாதகால் கொண்டு அதனாற் சாவு அற்று எழுந்த தன்மையுடையோரே சாவுத் திறமென்னுஞ் சாத்திறத் திருவாளர் இரண்டு பிறப்பாள ரென்னும் சிறப்பு மிக்கோர் எனவும் அறியாதவராய் சினந் தெழுந்து அந்தணராகிய யாம் உனக்கோ மற்றவர்களுக்கோ அடிமையாதல் இவ்வுலகில் எங்கும் இல்லை இதையறியாது பிடிவாதம் பேசும் பித்தா விரைந்து இவ்விடம் விட்டோடு என்றுவைது விரட்டிப் பற்றி அவரோடு கையிற் பின் றொடர்ந் தோடிப்பிடித்து நிறுத்தி அவரிடமிருந்த ஓலையை இழுத்துப் பறித்துக் கிழித்தெறியலும் அவரைக் கிழவனார் வலிந்து பிடித்திழுத்து கூகூவென்றிரைந்து இவன் எனக்குச் செய்ய வேண்டிய வழியடிமைத் தொண்டு செய்யாமல் மேலும் அந்தச் சீட்டையும் கிழித்தெறிந்து விட்டான் இத்தீயவன் எனமொழிந்து சபையோரிடம் இவ்வழக்கு

Koviloor Digital Library

தீர்த்து விடுங்களெனச் சென்று இவ்வுண்மைக்குச் சாட்சியாக மூல ஓலை இதோ இருக்கிறது பாருங்கள் என அச்சபையோரிடம் ஓர் ஓலையை நீட்டிக் காட்டலும் சபையிலுள்ள வழக்கறிஞர்கள் அதை நன்குகப் பார்த்து தீர்க்கமாக யோசித்து கிழவன் நீட்டிய ஓலைவாசி நீயேயாம் என நம்பியாரூரற் குரைக்கவும் முதியோனுய் வந்த சித்த வேதியர் தம்மிருப் பிடங் காட்டக் கூட்டிக் கொண்டு விரைந்து திருஅருட்டுறை என்னும் கோவிலுட் சென்று நிலைகெட்டு அயர்ந்து ஆச்சரிய மடையும் வண்ணமாய் மறைந்து சோர்வு தெளிந்து கூப்பிடும் நம்பியாரூரர் கண்டு மிக்க வியப் பெய்த எல்லாமும் வல்ல இறையவனே தானுய் விளங்கும் உருவங் காட்டி அவரை முறையுடன் ஆட் கொண்டு முன்பு தளராத வலிமைபல பேசி வன்றெண்டனுக வந்து கரங் குவித்து முந்நிற்கும் அந்நம்பிக்கு மிக்க பொற்புடன் தமிழ் கவிதை இசைக்கும் தன்மையையருளி மறைந்து பின்பு அமித வாரியை யன்ன கெடில நதிபாயும் திருவதிகைக்குச் சமீப மாயுள்ள சித்தவட மடத்தில் தூங்கும் அந்நம்பியாரூரர்பாற் சென்று சிரசிற் றிருவடி சூட்ட வென்னும் வாசியைக் காபாலத்திற் கேற்றும் வித்தை யாற் றூங்காமற் றூங்கும் தொழிலென்னும் சிவயோக வியல்புரித் தாகுமாறு கற்பித்து பராபரனுனவர் மறைய திருமிக்க நம்பியாரூரரும் அவ்வாறே பயிலும்நலத்தால் தம்பிரானைத் தோழமை கொள்ளும் தகவும் இந்திர போகமென்ன இரு மனைவியருடன் இகவாழ்க்கையயும் பெற்று ஈசன் தந்த பொருளென்னும் வாசியை பெருகியோடும் ஆற்றில் விட்ட பொருளென்ன விட்ட குறையெல்லாம் தீரும்படி மூலாதார மென்னுந் திருக்குளத்தில் வீணுகாமற்றேடி யெடுத்த வென்னும் அமித தாரணை செய்து அந்நலத்தால் குருநாதன் தேடி வலிய வந்து திருமணம் நடவாமற் றடுத்தாட் கொண்ட அன்றைய தினம் கண்டாற் போன்று சரீரத்தில் மாறுபாடாந் தன்மைகள் எதுவும் தோன்ருமல் எப்பொழுதும் சுந்தரராகவே யிருந்து என்றென்றும் மாரு

Koviloor Digital Library

இளமை நலமாஞ் செல்வ மெய்தி காய சித்தி பெற்று கல்லும் சரீரப் பரிசத்திஞல் தங்கமாய் மாறும் அருமையாகிய நலம் தன்னைத் தேடிவந்தடையப் பெற்று அப்படியே அட்டமா சித்திகளும் பெற்று சிவஞான வள்ளலாக விளங்கி முத்திநெறி யறுபத்து மூன்றிற்கும் சுத்த சிவமயமே தாஞய் விளங்கும் சிவத்திருவாளர்கள் அறுபத்து மூவருக்கும் அடிமை யுவமானமாக இலக்கியக் குறிப்பொன்றருளி உலகோர்கள் உய்வடையும்படி யீய்ந்து பரமேச்சுரனென்னும் அண்டவெளியில் ஒளியாய் விளங்கும் வெள்ளியால் இவ்வுலகத் தெய்திய வெள்ளானை என்னும் இரசத்தைக் கட்டிக் ககனகுளிகையாகச் செய்து கொண்டு அதன் நலத்தாற் சொரூப சித்தி பெற்று ஆகாய வழியாக வெள்ளிமலை யென்றும் வடதுருவம் என்றும் வழங்கும் அழியா நிலையை யடைந்தார் சுந்தரமூர்த்தியாம் நம்பி யாரூர். (௬௰௨)

ஞானம்

புகழ்மிக்க ஞானச் செல்வமே தமது மகவாகவாம் படிக்கும் தலைவன் அருட்செல்வம் வளரவும் அகத்துள் மாசு கூடாமல் (வீட்டில் (சரீரத்துள்) புறக்கருவி யாதிகளாற் றீங்கு விளையாமல்) எங்கெங்கும் நாடி தூய்தாக்கி (நாடி எங்கும் அமித தாரணை செய்து) நலம் ஓங்க குன்ருமல் எரி வளர்த்து (மூலத்தலத் தங்கி வளரச் செய்து) அன்னம் இனிதே யமைய (வாசி நன்நிலையுடையதாய் ஆக) மோக்கவுரித்து ஆம் அகப்பேய் உறவால் அரியதாகிய பதம் கண்டு (விடுதலையடைய வேண்டியதும் அகத்தைப் பேயென்ன வலைத்தழிக்குந் தன்மையால் அகப்பேயென்னப் பட்டதுமாகிய மனம் வசப்படலால் மேலாம் பதம் கண்டு) அகத்தோன் பரிவாய் பிடித்து அமிதமாக வுண்ண இசைவித்து (பதியானவன் இன்பத்துடன் அமிதகலையாகிய வாசியை (நாலங்குலம்மாகப்) பிடியளவாக வுண்ணச் செய்து) இதமாய் அவனே தாஞக அமையும் உயர்வாம் தவஞ் செய்து (அன்புடன் சிவனே சீவஞய் அமையும் மேன்மையாகிய தவம்

Koviloor Digital Library

செய்து) இசைஞானி சார்ந்தார் சுவர்க்கபதம். புகழ்மிக்க ஞானியாய் மோக்க வின்பமெய்தினர் இசை ஞானியார். (சாமாடீ)

இல்லற நலமோங்க பதியினன்பு மிகமனையை சுத்தம் செய்து அன்னம் அமைய எரிமூட்டி மோக்கவுரியதாம் அகப்பேய்கைக் கொண்டு பதம் பார்த்து தலைவன் அன்புடன் பிடித்து அமிதமென வுண்ணச் செய்து அவனே தானுகக் கூடும் இயல்புடைமையால் நற்பேறெய்தி மகிழும் கிரியையின் றன்மையே இல்வாழ் மகளிரின் ஒழுக்க மாயின வாறுணர்க.

இந்நால்வரும்மோக்க பாதம் நான்கின் தன்மையை யடைந்து முத்திப் பேறெய்தினவர்கள் முத்தியடைதற் குரிய மார்க்கங்களை எல்லாம் முறையே தொகுத்து இனிய செந்தமிழில் சுந்தர மூர்த்தி நாயனுர் சொல்லிய இலக்கியக் குறிப்பின் உயர்வறிந்து பேரின்பமடையும் வண்ணம் இம்முத்திநெறி இலக்கணம் செய்தோம். சற்குருவருட் திறத்தால் சிவயோகம் ஓங்குக. திருத் தொண்டர்கள் புகழ் பெருகுக. கடல் சூழ்ந்த அவனி முழுதும் நான்மறையும் நல்லறமும் நற்றமிழும் ஓங்கித் தழைக்க திருவெண்ணீறும் ஷண்முக நாதனும் யான்சொல்லிய இச்சத்திய வேதமும் உலகுக்கு என்றும் உண்மையொளி வீசுக.

முத்தி நெறி இலக்கணம்

முற்றிற்று



Koviloor Digital Library

உ

சிவமயம்

சைவத்திருமுறை

மெய்மூல மந்திரங் கிட்டு நலத்தால்
வினைதீர வெண்ணீ றுநல்கி
யுய்வு தருமடி யின்னிசை ஈச
னுறுமறை வாசற் றிரக்கச்
செய்யு மடியி னிசையடி பேணுந்
திறல்சே ரடியி னிசையுங்
கைவரக் கோவையேற் றங்கண்டு பல்லாண்டு
கண்டிசை யோர்வா ழிவாழி.

(மெய்மூல மந்திரங் கிட்டும் நலத்தால்)

உண்மையாகிய குருவுபதசம் பெற்ற நன்மையால் (வினை தீர வெண்ணீறு நல்கி உய்வுதரும் அடியின் இசை) கேடு விளைக்கும் தத்துவக் கூட்டங்களை நீருக்கி அழியா நிலையா தரும் அடியாகிய பின்கலை யொலியும். (ஈசன் உறும் மறைவாசற்றிரக்கச் செய்யும் அடியின்இசை) இயமானன் நிலைகொண்டு நிற்கும் வேதக் கபாடந் திரக்கச் செய்யும் அடி என்னும் இடகலையின் ஒலியும் (அடிபேணுந் திறல்சேர் அடியின் இசையும் கைவர) அடிபேணுந் தன்மை என்னும் வாசியமித தாரணை செய்யும் சுழிமுனை யொலியும் (கைவரக் கோவை ஏற்றங் கண்டு) முறையே சித்தியாக அதனுற் கோவையாய் அமைந்த ஆறுதாரமேறிப் பார்த்து (பல்லாண்டு கண்டு இசையோர் வாழி வாழி) அந்நலத்தாற் பல்லாண்டு பல்லாண்டு காணும் சித்தி பெற்று மறையோர்கள் வாழி வாழி.

Koviloor Digital Library

(மெய்மூல மந்திரங் கிட்டு நலத்தால்)

உண்மையாகிய மூலமந்திரம் என்னும் திருமூலர் திருமந்திரம் வாய்க்கப் பெற்று அந்நலத்தால் (வினைதீர வெண்ணீறு நல்கி யுய்வு தரும் அடியின் இசை) சமணர்கள் பொய் யொழுக்கம் கெடப் பாண்டியற்கு திருவெண்ணீறு அளிக்கும் அடிகளாகிய திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருமுறையும் (ஈசன் உறும் மறைவாசற் றிரக்கச் செய்யும் அடியின் இசை) திருமறைக்காட்டில் வேதம் பூசித் தடைத்த வாயிலைத் திறக்கும்படி பாடியருளிய அடிகளாகிய திருநாவுக்கரச நாயனுருடைய இசையாகிய தேவாரத் திருமுறையும் (அடிபேணுந் திறல்சேர் அடியின் இசையும்) திருத் தொண்டத் தொகைபாடி அடியார் சீர் பரவிப் பணியும் அடிகளாகிய சுந்தர மூர்த்தி நாயனுரருளிய திருமுறையும் தனதாகப் பெற்று (கோவை ஏற்றங் கண்டு) மாணிக்க-வாசகரருளிய திருக்கோவையாரின் மேன்மைத் திறமுணர்ந்து (பல்லாண்டு கண்டு இசையோர் வாழி வாழி) சேந்தனுர் அருளிய திருப்பல்லாண்டுணர்ந்து கருவூர்த் தேவர் திருமாளிகைத் தேவர் முதலியோர் அருளிய திருவிசைப்பா வோதி வாழிய வென்றும் வாழிய வாழியவே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

திரு நாவலாரூரர் செய்தருளிய அட்டமா சித்தி

அணிமா :

சேய்மையாய் ஆற்றில் சேர்த்த பொருளெலாம்
ஆரூர்க் குளத்தில் அணிமையாய் வந்து
அமையக் காட்டியது அணிமா சித்தி (க)

மகிமா : (மகிழ்செய்)

பெருக்கெடுத் தோடும் பெருவெள் ளத்தை
வழிவிடு மாறு மொழிந்தவ் வெள்ளம்
கூடி நின்று குவியச் செய்த
மகிமை காட்டியது மகிமா சித்தி (உ)

கரிமா :

உயிர்க்கணம் அனைத்தும் ஒடுங்கி நிற்கக்
கண்டு நிற்கும் காலன் கவர்ந்த
ஆவியும் உடம்பும் அமைவு பெற்று
முன்னாள் விழுங்கிய முதலைவாய்ப் பிள்ளையை
காண அழைத்தது கரிமா சித்தி (ங)

லகிமா :

மழையாய்த் தானியம் வருஷித் தெங்கும்
எடுக்க முடியாது என்னும் மலையாய்
குவிந்ததை ஆரூர் கொண்டு வந்து
சேர்த்துப் பரவையார் சித்தங் களிக்க
லகுவாய்ச் செய்தது லகிமா சித்தி (ச)

பிரகாமியம் :

பரவையார் வாயிற் பாங்கிற் செல்லாது
செயச்சங் கிலியார் செய்கை கண்டு
சங்கிலி யாரைத் தூரற் கமைவாகப்
பிரிதோரு இடத்தில் அமையும் மாறு
அண்ணலை வேண்டி அவ்வாறு ஓரிடம்
பெறற்கமை வுற்றது பிரகாமிய சித்தி (ரு)

Koviloor Digital Library

பிராப்தி :

பரவையார் ஊடலை பரமர்க் குணர்த்தி
ஊடல் தீர்ந்து கூடல் நிகழச்
செய்க என்னச் செப்பி அவ்வாறு
பெறப்பற் றியது பிராப்தி யாகும் (௬)

ஈசத்துவம் :

சுந்தர வடிவாய்த் தோன்று கண்ணாடியின்
சாயையோர் உருவாய் சமைந்து தோன்ற
இறையவன் முன்னோர் இறையவன் என்ன
ஈசத் துவம்பெற் றெழிலுருக் கொண்டதும்
சுந்தர மூர்த்தி யென்றுசொல்ல அமைந்ததும்
ஈசத் துவமெனும் எழிலுரு சித்தி. (௭)

வசித்துவம் :

இறைவனே தவறு கண்டு இவ்வாறுகணைச்
செய்த பின்பும் திடமாய் அவனே
அவ்வகைக் குற்றம் ஆக்கும் படியாய்
செய்து பின்னும் செங்கலும் பொன்னாய்
வரக்காட் டியது வாழ்சித் துவமாம் (௮)
இறைவன் முன்னர் எதிரிலாச் சித்தாய்
அமைவு கொண்டு அற்புதம் பலவும்
செய்து நின்ற திறமிகு சித்தாம்
நம்பி யாரூரர் நமக்குக் காட்டிய
அட்டமா சித்தியி தாகுங் காண்க.

Koviloor Digital Library

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

திருஞான சம்பந்தர் திருஅவ தாரச்
சிறப்பின் விளக்கம் செப்புகின்றோம் (௧)

ஆன்ம நாயகன் அமைத்த நியதியின்
இருவினை விலங்கை இட்டு உடலச்
சட்டையை மாட்டி விட்டு உயிர்க்கணம்
சிறைப்படி வருத்தம் செய்யும் இயற்கையைக்
கண்டு திருவுளம் கனிந்து உயிர்ச்சிறை
மீட்க மானிட மேனி கொண்டு
தேவ தேவனின் திருவருட் குருவாய்
விளங்கும் முருகன் இம்மேதினி வந்தார் (௨)

அவரைத்

தேவ தேவனின் திருக்கும ரன்ஆம்
என்பது அறியாது எமது மகவென
மோய்சேய் ஆக முறைகொண் டாடினர் (௩)

அப்போது

இன்னிசைக் குயிலின் இளஞ்சிறு குஞ்சைத்
தன்குஞ்சு என்ப தாக நினைந்து
காக்கை செய்யும் காக்கைப் பறவையை
அயலது வாக்கி அழைத்துச் செல்லும்
கோகிலம் போல்உமை குளக்கரை யதனில்
தோன்றிக் கண்ணீர் துடைத்து அழுகையை
மாற்றிப் பொற்சிறு வன்னம் அதனில்
சிவஞானம் தரும்திரு முலைப்பால் அமுது
அளித்து உண்பித்து அம்மையும் அப்பனும்
குழந்தை உரிமை கொண்டு காட்டினர் (௪)

இந்த உண்மையைத் தந்தை என்னும்
அந்தணர் அறியாது அதட்டி மிலாறுகொண்டு

Koviloor Digital Library

ஓச்சிப் பிரம புரீசா உனக்குப்
பால்யார் தந்தது அப்பாலை யேன்உண்டாய்
அவர்களைக் காட்டென அஹஹா அஹஹா
தோஎன அவர்களைச் சுட்டிக் காட்டித்
தோடுடை யசெவி யன்விடை யேறி
என்று தொடங்கும் இசையினில் இவனே
பிரம புரீசப் பெயருடைப் பெம்மான்
என்று சுட்டி யான்அன் றேஎன
மொழிந்துஅத் தந்தையின் முகத்தை நோக்கிச்
சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது
அவ்விதச் சம்பந்தம் ஆவதோர் நெறிமனம்
வைத்துணர் ஞானம் அதனுல் வாய்க்கும்
அவ்விதம் ஆக அமைந்து வந்த
ஞானசம் பந்தன் நான்எனு மாறு
நனிபள் ளியினில் ஞானம் நல்கித்
தன்னுடன் காழியிற் சம்பந்தம் ஆக்க
ஞானசம் பந்தன் ஆகிப் பாலை
நெய்தல் பாடி நின்ற பெருந்தகை
திருக்கோ லக்கா சென்றுதன் கையால்
ஒற்றறுத்து இன்னிசை ஓதுதல் கண்டு
கைவருந்தும்எனக் கருதி இரங்கிப்
பொன்னின் நற்றுளம் பொருந்த அளித்தார் (ரு)

பின்னர்,

சிற்றடி வருந்தத் திருவரத் துறைக்கு
நடத்தல் கண்டு நன்முகத் தால்ஆன
சிவிகையும் குடையும் சின்னமும் அளித்தார் (சா)

பட்டிச் சுரத்திற்குப் பகலவன் கிரணம்
படச்செல முத்துப் பந்தர் அளித்தார் (எ)

இவையெலாம்

தன்னுடன் வேறலாத் தன்மை வாய்ந்த

Koviloor Digital Library

சிவமயம்

சிவசுடர் உருவாய்த் திகழ்தரும் ஒருபொருள்
மண்ணுயிர்க் கணங்கட்கு இன்னருள் புரிய
வலிதே உலகின் மானிட உருவம்
எடுத்தது தகுதியோ இதுஅவம் ஆங்கு
தரித்திடல் அவமாய்த் தரிக்கும் அவதரம்
என்று தரியாது இறைவன் அவ்வுலகச்
சிறப்பை மண்ணுலகில் திகழச் செய்ததுஆம்.(அ)

ஆகையால்,

தெய்வக் குழந்தை திருஞான சம்பந்தர் (௯)

அவர்இங் குற்ற அதுவே அவதரம் (௰)

இருவினைப் பற்றுக் கோடு இல்லாஒருவர்
அவமாய்த் தரித்தலே அவதாரம் ஆகும் (௰௧)

அவர்க்கு அவ்வுலகம் அதனில் இருந்தே
சீரும் சிறப்பும் செவ்விதின் இங்குறும் (௰௨)

முதற்பொருள் அவர்கள் முன்னே நிற்கும் (௰௩)

குழவி பேசும் மழலை வாய்மொழி
முத்தமிழ் வேதமாய் முழக்கம் காட்டும் (௰௪)

இத்தரை மீதில் இதற்கு இலக்கியமாய்
வந்தவர் ஞானசம் பந்தரே யாகும் (௰௫)

ஆகையால்

சைவமுதற் குருசம் பந்தரே யென்று
வந்தித்து அவர்அடி வாழ்த்தி வணங்குவோம்
(௰௬)

ஓம் ஞானசம்பந்தாய நம
திரு ஞானசம்பந்தர் திருவடி
வாழ்க
வாழ்க வாழ்க

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR
A. No. 46358
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

இந்நூலைப் பற்றி...

நான்பெற்றவின்பம் பெறுகவிவ் வையகம்
வான்பற்றி நின்றமறைப்பொருள் சொல்லிடி
னூன்பற்றி நின்றவுணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந்தானே. என்ற

ஆகமச் செம்மல் குறிப்பில் குறிப்புணர உரைத்தபடி தான் பற்றவேண்டியது எது என்பதையும், உச்சிமுதற் பாதம் வரை (முழுவுடலம்) பற்றி நிற்கும் உணர்வு எது என்பதையும் அண்டவெளியாகியவான் பற்றி நிற்கும் மறைப்பொருள் இதுவே என எம் ஞானத்தெளிவு குரு சித. வே. சண்முகநாத பிள்ளை அவர்கள் உலகம் உய்ய சிவநெறி தழைத்தோங்க நாத்திகம் வேரோடு அழியஆக்கியது முத்திநெறி இலக்கணம். இந்நூல் கிடைத்தவர்கள் புண்ணியவான்கள். இந்நூலை வாசிக்க வாசிக்க தெளிவு வுண்டாகும். இந்நூலை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் சிவனடியார்கள் பெற்றஇன்பம் நாமும் பெறலாம் என எழுதி நிறைவு செய்கின்றோம்.

இவண்

அடியார்க்கு அடியேன்

இராம. ஆதிரெத்தினம் பி.சு. இசக்கியப்பன்

(இணைச்செயலாளர்கள்)

முத்தமிழ் வேதத்திருச்சபை, தேவகோட்டை.